விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 ஆவணி 4 ஜுலைகஜ் 8 இதழ் 191
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 20-8-1985

## பொலிஸ் சூட்டதில் ஜப்பானியர் பலி!

[கொழும்பு]

பொத்துவிலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஜப்பானியர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இவர் வெள்ளவாயா சீனித் தொழிற்சாலையில் கடமையாற்றுகிறார் இரு மலேசியச் சகாக்களுடன் டக்கோரா என்ற இந்த ஜப்பானியர் சம்பவ தினம் அறுகம்பேயிக்கு மோட்டார் காரில் வந்துள்ளார்.

பொத்துவில் சோதனைத் தடை முகாமில் இவர்கள் வந்த காரை நிறுத்தும்படி பொலிஸார் சைகை செய்தனராம் ஆனால் அம்மோட்டார் கார் இதனை மீறவே பொலிஸார் அதன் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அப்போதே அந்த ஜப்பானியர் கொல்லப்பட்டார். [கி]

# 'இன்ரசிற்றி' மர்ம விபத்து!

# வடபகுதி ரயில் சேவை ரத்து!!

(அலுவலக நிருபர் ஏ. வி. எம்.)

காங்கேசன்துறையில் இருந்து கொழும்பு சென்ற இன்ரசிற்றி' கடுகதி புகையிரதம் மர்மமான முறையில் மதவாச்சியருகே நேற்று விபத்துக்குள்ளானது. இந்த ரயில் வண்டியின் கடைசி இரு பெட்டிகளும் சேதமடைந்தன. தலைமைக்கார்ட் போர்மன் ஆகியோர் உட்பட அவ்விருபெட்டிகளிலுமிருந்த பயணிகளும் இவ்விபத்தில் காயமடைந்தனர். ஆயினும் இந்த ரயில் வண்டி சேதமுற்ற இரு பெட்டிகளும் அகற்றப்பட்ட பின்னர் சுமார் மூன்று மணிநேர தாமதத்தின் பின் கொழும்பு போய்ச் சேர்ந்தது. இவ்விபத்தையடுத்து வடபகுதி ரயில் சேவை மறுஅறிவித்தல்வரை ரத்துச் செய்யப்பட்டுள்ளது

அதிக பிரயாணிகளுடன் நேற்றுப் பிற்பகல் 2-30 மணியளவில் காங்கேசன்துறையிலிருந்து புறப்பட்ட இன்ரசிற்றி ரயில் 2-45-க்கு யாழ் புகையிரத நிலையத்தை வந்தடைந்ததும் மேலும் அதிகப் பிரயாணிகள் ஏறிக்கொண்டனர், மீண்டும் 2-45-க்கு கொழும்பு நோக்கிப் புறப்பட்டது மதவாச்சிக்கும் அனுராதபுரத்துக்குமிடையில் உள்ள பரசங்கவேவ என்ற ரயில் நிலையத்துக்கண்மையில் இன்ரசிற்றி ரயில் ஓடிக்கொண்டிருந்தபோது

(8-ம் பக்கம் பார்க்க)

## இந்திய கிரிக்கெட் கோஷ்டியின் இலங்கைப் பயணத்தை ரத்து செய்யும்படி ஆர்ப்பாட்டம்!

(சென்னை)

இலங்கையில் கடந்த சில நாட்களாக தமிழ்மக்கள் அதிகளவில் இராணுவத்தினரால் கொல்லப்பட்டுள்ளதினால் இந்திய கிரிக்கெற் கோஷ்டி இலங்கைக்கு செல்லக் கூடாது எனக் கோரி சுமார் 500 க்கு மேற்பட்டவர்கள் சென்னையில் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

சென்னையிலுள்ள பிரபலவிளையாட்டு அரங்கில் உலகத் தமிழ் இளைஞர் பேரவைத் தலைவரும் சட்டமேலவை உறுப்பினருமான டாக்டர் ஜனார்த்தனன் தலைமையில் இவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர்.

இலங்கையில் அப்பாவித் தமிழர்கள் கொலை செய்யப்படுவதனை இலங்கை அரசு தடுக்க வேண்டும் என்று அவர்கள் கோஷமிட்டனர்.

## வியாழன் மீண்டும் ஆரம்பம்?

(புதுடில்லி)

நாளைமறுதினம் வியாழக்கிழமை திம்பு சமரசப் பேச்சுக்கள் மீண்டும் தொடர்ந்து இடம்பெறலாம் என நம்பத்தகுந்தவட்டாரங்கள் தெரிவித்துள்ளன

இச்சந்திப்பில் இருசாரருக்கும் மிடையே இடம் பெறும் கருத்துப்பரிமாறல் ஒரு புதிய கோணத்தில் அமைந்திருக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது [கி]

## இலங்கைத் தமிழர் மீது வன்முறைகள்:

# அறிக்கை கேட்கிறார் ஜாக்கர்

## நிதி அமைச்சர் சிங் கவலை!

[புதுடில்லி]

இலங்கை ஆயுதப்படையினர் அண்மையில் அப்பாவித் தமிழ் மக்கள் மீது நடத்தியதாகக் கூறப்படும் தாக்குதல்பற்றி மத்திய அரசு விரைவில் அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்கவேண்டும் என்று இந்தியலோக் சபா சபாநாயகர் திரு. பல்ராம் ஜாக்கர், தமது அரசைக் கேட்டுள்ளார்.

நேற்று நடைபெற்ற லோக் சபாவின் கேள்வி நேரத்தின் பின் இலங்கையில் அண்மையில் நடைபெற்ற வன்முறைகள் பற்றி எதிர்கட்சியைச் சேர்ந்த தமிழ் உறுப்பினர்கள் கேள்விகளை எழுப்ப முயன்றனர். அப்போது இதுவிடயமாக தாமே மத்திய அரசைக் கேட்டுக் கொள்வதாக திரு. பல்ராம் ஜாக்கர் தெரிவித்தார்.

நடப்பு கூட்டத் தொடர் முடிவடைவதற்கு முன் இலங்கை தமிழர் நிலைபற்றிய விசேட விவாதம் ஒன்றுக்கு லோக்சபா தலைவர் அனுமதிப்

(8-ம் பக்கம் பார்க்க)

## தம்பதி கடத்தல்

(யாழ்ப்பாணம்)

காரைநகர்வேம்படியிலுள்ள பேக்கரியைச் சேர்ந்த இருவர் நேற்று முன்தினம் இனந் தெரியாதவர்களினால் கடத்திச்செல்லப்பட்டனர்.

பேக்கரி உரிமையாளர், அவரது மனைவியுமே கடத்தப்பட்டதாக கூறப்படுகிறது.

பேக்கரி உரிமையாளர் ஒரு தமிழரென்றும், அவரது மனைவி தென்பகுதியை சேர்ந்தவர் என்றும் மேலும் கூறப்படுகிறது (க)

## கன்னாதிட்டி மக்கள் வங்கி அடகு நகை யாழ். பொலிஸ் விடுதியில் வழங்கப்படும்!

[யாழ்ப்பாணம்]

யாழ். கன்னாதிட்டி மக்கள் வங்கிக் கிளையில் அடகு வைத்த நகைகளை மீட்க, ஏற்கனவே பணம் செலுத்தியவர்களுக்கு இன்று தொடக்கம் யாழ். பொலிஸ் விடுதியிலிருக்கும் மக்கள் வங்கிக்கிளையில் வைத்து அடகு நகைகள் வழங்கப்பட

(8 ம் பக்கம் பார்க்க)

ROCK ENGINEERS AND CONTRACTORS IN
Water Supply Works
TUBE WELLS, PLUMBING, FITTINGS, TANKS
under direct supervision of qualified and well experienced personnals.

குழாய்க் கிணறுகள்

நவீன இயந்திரம் மூலம் குறைந்த நேரத்தில், குறைந்த செலவில், சிறந்த முறையில் உத்தரவாதத்துடன் அமைத்துக் கொடுக்கப்படும்.

உங்கள் தேவைகள் :-
1. வீட்டுத் தேவையா ?
2. பெரிய அளவிலான பயிர்ச் செய்கையா ?
3. தென்னம் தோட்டமா ?
4. பெரிய அரிசி ஆலையா ?
5. பெரிய அளவிலான தொழிற்சாலையா ?

எதுவாக இருப்பினும் தேவைக்கேற்ற தண்ணீர் பெற்றுத்தரப்படும்.

தொடர்பு கொள்ளவும் றொக் என்ஜினியர்ஸ்
பருத்தித்துறை வீதி, கோப்பாய் வடக்கு.
(கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு முன்பாக). 140

## தங்காலைச் சிறை இளைஞர்கள் வெலிக்கடைக்கு இடமாற்றம்?

[கொழும்பு]

தங்காலைச் சிறைச்சாலையிலிருந்த தமிழ் இளைஞர்கள், வெலிக்கடைச்சிறைச்சாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனராம்.

தங்காலைச் சிறைச்சாலையிலுள்ள முப்பத்துமூன்று தமிழ் இளைஞர்கள் கடந்த எட்டாம் திகதிமுதல் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்க போவதாக இம்மாத ஆரம்பத்தில் அறிவித்திருந்தது தெரிந்ததே.

பயங்கரவதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு பதினெட்டு மாதங்களாகியும், இந்த இளைஞர்கள் நீதிமன்றத்தின் முன்னர் நிறுத்தப்படாததைக் கண்டித்தே மேற்படி இளைஞர்கள் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாகத் தெரிவித்தனர்.

அதே நேரத்தில் வெலிக்கடையிலிருக்கும் தமிழ் இளைஞர்களும், தங்காலைச்சிறையிலிருக்கும் இளைஞர்களுக்கு ஆதரவு தெரிவித்து உண்ணாவிரதம் இருக்கப் போவதாகத் தெரிவித்தனர்

மேற்படி இளைஞர்களின் நலனில் அக்கறை கொண்டிருக்கும் சிரேஷ்ட சட்டத்தரணி ஒருவர் நேற்றிரவு 'ஈழநாடு'வுக்கு இது பற்றித் தெரிவிக்கையில், உண்ணாவிரதம் மேற்கொண்ட இளைஞர்கள் தங்காலைச் சிறையிலிருந்து வெலிக்கடைச் சிறைக்கு இடமாற்றப்பட்டதாகத் தமக்குத் தெரிவிக்கப்பட்டதாகக் கூறினார்

சிறையிலுள்ள தமிழ் இளைஞர்கள் பற்றி இவ்வாரம் ஓரளவு அறியக்கூடியதாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

# விளம்பரம்

## விற்பனைக்கு

மினி சினிமாவுக்கு உரிய 45 பைப் கதிரைகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- செ. கோபாலு, மெயின்வீதி, சுன்னாகம். 57

## பயிற்சி

மூன்று வருட மருத்துவ தாதிப் பயிற்சி ஆங்கிலமொழி மூலம் எதிர்வரும் ஆவணி மாதம் 30ம் திகதி (30-8-85) ஆரம்பமாகவுள்ளது குறிக்கப்பட்ட தொகையினரே அனுமதிக்கப்படுவர். நேரில்வந்து பதிவுசெய்துகொள்ளவும். அதிபர், உயர்கல்விக் கல்லூரி, 73, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (128)

பாலர் ஆசிரியர் பயிற்சி நெறி 1984—தொடர் II ஆரம்பமாகவுள்ளது. G.C.E சித்தியடைந்த பெண்கள் விண்ணப்பிக்கலாம். குறித்த தொகையினர் மட்டுமே சேர்த்துக்கொள்ளப்படுவர். குடாநாட்டுக்கு வெளியே உள்ளவர்களுக்கு தபால்வழியும் கற்பிக்கப்படும். பாலர் ஆசிரியர் சங்கம், 610 (418), கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (132)

## விற்பனைக்கு

1 நாள் குஞ்சுகள் விற்பனைக்கு தேவைப்படுவோர் உடன் தொடர்புகொள்ளவும் இரத்தினமாளிகை, கன்னுதிட்டி, யாழ்ப்பாணம். ந. ஸ்ரீதரன், தெணியம்பை, வல்வெட்டித்துறை. (141)

## காணவில்லை

கறுப்பையா புஸ்பராணி என்பவரை 19-8-85 திங்கட்கிழமை காலை தொடக்கம் காணவில்லை. வயது 14. உயரம் 4'. அவரைக் கண்டவர் கீழ்க்காணும் விலாசத்திற்கு தொடர்புகொண்டால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். 11/3, கோவில் வீதி, யாழ்ப்பாணம். 187

## யாருடையது?

திருமதி இந்திரலதா ரவீந்திரன் நீ. செல்லையா பிறந்த இடம் ஊர்காவற்றுறை. திகதி 24-08-1963 அடையாள அட்டை இல. 637361214V என்னும் விபரங்களடங்கிய H O 325598 இலக்கமுடைய பாஸ்போர்ட் என்னிடமுள்ளது. உரியவர் உடன் தொடர்புகொள்ளவும். கே. சாந்தலிங்கம், புளியங்கூடல் தெற்கு, ஊர்காவற்றுறை. 138

## முதலாவது பிறந்ததினவாழ்த்து செல்வி லக்ஷியாஸ்ரீதரன்



அளவெட்டியைச் சேர்ந்த ஸ்ரீதரன் ரேகினி தம்பதிகளின் ஏக புத்திரி லக்ஷியா தனது முதலாவது பிறந்த தினத்தை 20-8-85ல் மேற்கு ஜேர்மனியில் வெகு குதூகலமாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, தாத்தா, அம்மம்மா, சித்தி, அன்ரிமார், அங்கிள்மார், மச்சான், மச்சாள்மார், மற்றும் உள்ளூர் உறவினர்கள் பல்கலையும்கற்றுப் பல்லாண்டுகாலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றனர். (60)

## முதலாவது பிறந்ததின வாழ்த்து
### செல்வன் செந்தில்குமரன் யோகநாதன்

சங்கரத்தையை சேர்ந்த யோகநாதன்-தனலட்சுமி தம்பதிகளின் புதல்வன் செந்தில்குமரன் இன்று தனது முதலாவது பிறந்த தினத்தை குதூகலமாக தனது இல்லத்தில் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, சகோதர, சகோதரிகள், அப்பாச்சி, அம்மப்பா, மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், சித்திமார், மச்சாள்மார், மச்சான்மார் மற்றும் உற்றார், உறவினர்கள் இவரை சீரும், சிறப்பும், நிறைந்த கல்வியும், செல்வமும் பெற்று நீடூழி வாழ்கவென மனமார வாழ்த்துகின்றனர். (145)

உ

## திருமண அழைப்பு

நிகழும் குரோதன வருடம் ஆவணித் திங்கள் 6 ஆம் நாள் (22-08-85) வியாழக்கிழமை முற்பகல் 10-30 மணி முதல் 11-30 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்,

| | |
|---|---|
| எனது ஏக புத்திரன் | எமது புதல்வி |
| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
| ஜெயேந்திரன் | ரஞ்சினிதேவி |
| (ராஜா ராணி ஸ்ரேசரிஸ், ருகுணை) அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

மணமகள் இல்லத்தில் நடைபெறும் திருமண விழாவிற்கு தாங்கள் தங்கள் சுற்றம் சூழ வருகை தந்து மணமக்களை வாழ்த்தும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்!

| | |
|---|---|
| திருமதி | திரு திருமதி |
| சரஸ்வதி பாலகிருஷ்ணன், | க. க. சுப்பிரமணியம் தம்பதிகள், |
| 23, யாழ்: வீதி, யாழ்ப்பாணம். | கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில். |

(131)

## வெளிநாட்டுப் பிரயாணங்கள்

பிரான்ஸிற்கு விசாவுடன் செல்ல விரும்புகிறீர்களா?
மத்திய கிழக்கு நாடுகளில் பணிப்பெண்கள், தொழிலாளர், மெக்கானிக், மேசன், மரவேலையாளர் போன்ற தொழில் பெற்றுச் செல்ல விரும்புகின்றீர்களா?
பிரயாண வசதிகள் உடன் செய்துகொடுக்கப்படும்; ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

**ஷாஹி ஷிபாஸ் ஏஜென்ஸீஸ்**
125, கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம். 130

## மரண அறிவித்தல்
### திருமதி திருமணி கதிரமலை

(சங்கீத வித்வான் ஆசிரியை, மகாவித்தியாலயம் வவுனியா)

அன்னார் வவுனியா லிங்கம் தோட்டத்தில் 16-8-85ல் அகால மரணமானார். ஈமக்கிரியைகள் கிளிநொச்சி 'சாந்தி நிலையத்தில்' 18-8-86 அன்று நடந்தேறியது. உற்றார், உறவினர் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: க கதிரமலை (கணவன்)
(135)

## சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றம்

ஆனைவிழுந்தான், பளை வேலுப்பிள்ளை வல்லிபுரம் மகன் தர்மகுலசிங்கம் என்பவரின் மரணச் சொத்துக்களினதும் உடமைப் பொருட்களினதும் விடயமாக:-

...மரணமெய்தியவர்
வேலுப்பிள்ளை வல்லிபுரம், ஆனைவிழுந்தான், பளை.
—மனுதார்

இல: 235/ ரீ
தத்துவம்,
—எதிராக
வேலுப்பிள்ளை வல்லிபுரம் பெண் மனோன்மணி, ஆனைவிழுந்தான், பளை.
—எதிர்வாதி

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மேற் குறிப்பிட்ட வழக்கு மேற்குறிப்பிட்ட இறந்தவரின் மரணச் சொத்து நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.


அக்கறையுள்ள எவரும் 1985ம் ஆண்டு புரட்டாதி மாதம் 25ம் திகதி நாளன்று 9-30 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னிலையில் தோன்றி அப் பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1985ம் ஆண்டு ஆவணி மாதம் 12ந் திகதி.

நீதிமன்றத்தின்கட்டளைப்படி
ஆ. குணநாயகம்,
பதிவாளர்,

தயாரித்தவர்:
எஸ். கந்தசாமி
ஜே. பி. யு.எம்.
மனுதாரின் சட்டத்தரணி. 139

## 4-ம் வருட நினைவஞ்சலி
### அருட்திரு. ஜோண் சிங்கராயர்



பிறப்பு:
02-04-1914

குருப்பட்டம்:
25-03-1941

இறப்பு:
21-08-1981

21-08-85 புதன்கிழமை காலை சில்லாலை சதிரை அன்னை ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்;
சகோதரர், குடும்பத்தினர். 124

## மரண அறிவித்தல்
### திரு. நாகப்பா பசுபதி பாலச்சந்திரன்
### திருமதி பாலச்சந்திரன்

திரு. நாகப்பா பசுபதி பாலச்சந்திரன் (முன்னாள் Civil Aviation உத்தியோகத்தரும், தமிழ் இசைக் கலைஞர் சங்கம் காரியதரிசி), திருமதி பாலச்சந்திரன் ஆகியோர் வவுனியா லிங்கம் தோட்டத்தில் 16-8-85ல் அகால மரணமானார்கள்.

ஈமக்கிரியைகள் கிளிநொச்சி 'சாந்தி நிலையத்தில்' 18-08-85 அன்று நடந்தேறியது. உற்றார், உறவினர் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: க. கதிரமலை (மருமகன்)
[134[

## ஓராண்டு நினைவஞ்சலி
### திருமதி இராசையா நல்லம்மா



தோற்றம்:
06-08-1924

மறைவு:
01-08-1984

அன்பினால் உள்ளங்களை ஆட்சிகொண்டாய்
பண்பினால் பற்பலரை ஈர்த்தெடுத்தாய்
பாசமதை எல்லோர்க்கும்—எமைப் பரிதவிக்க
விட்டு நீ மட்டும் சென்றுவிட்டாய்
நீ பிரிந்து சென்றிங்கே ஆண்டொன்று சென்றாலும் உன் நினைவெமது உள்ளத்தில் பல்லாண்டாய் உயிர் வாழும்

அன்பு மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
இருபாலைச் சந்தி, கோப்பாய். 143

# உகண்டாவின் முன்னாள் ஜனாதிபதிக்கு சாம்பியாவில் அரசியல் அடைக்கலம்!

(லூசாக்கா)

அண்மையில் பதவியிலிருந்து கவிழ்க்கப்பட்ட உகண்டா ஜனாதிபதி மில்டன் ஒபேட்டோவுக்கு மனிதாபிமான அடிப்படையில் சாம்பியா அரசு அடைக்கலம் அளித்துள்ளதாக அறிவித்துள்ளது.

சாம்பியாவின் உள்துறை அமைச்சர் திரு. பிரெட்ரிக் ஸோம்பா நேற்று முன்தினம் லூசாக்காவில் இத்தகவலை வெளியிட்டார்.

ஆயினும் மில்டன் ஒபேட்டோ எங்கிருந்து, எவ்வாறு சாம்பியா வந்தார் என்பதனை சாம்பிய உள்துறை அமைச்சர் தமது பேச்சில் தெரிவிக்கவில்லை.

மில்டன் ஒபேட்டோ கடந்த வியாழக்கிழமை கென்யாவிலிருந்து விசேட விமானமொன்றில் 150 உகண்டா பிரஜைகளுடன் லூசாக்கா வந்துசேர்ந்தார் என்று கூறப்படுகிறது.

இடிஅமினுக்கு முன்னரும் பின்னரும் உகண்டாவின் ஜனாதிபதியாகவிருந்த மில்டன் ஒபேட்டோ கடந்த மாதம் இராணுவத்தளபதி ஒக்கேனா என்பவரினால் பதவி கவிழ்க்கப்பட்டதைத் தொடர்ந்து கென்யாவுக்குத் தப்பியோடியது தெரிந்ததே. (அ)

## இந்திய ஜனாதிபதியின் வாழ்த்துச்செய்தி

புதுடில்லி, ஆக 19

இந்திய ஜனாதிபதி திரு. ஜானி ஜெயில்சிங் ஆப்கானிஸ்தான் தேசிய தினத்தை முன்னிட்டு தமது வாழ்த்துச் செய்தியை ஆப்கான் அதிபர் பாபரக்கர்மாலுக்கு அனுப்பியுள்ளார்.

இச் செய்தியில் இருநாடுகளுக்குமிடையேயுள்ள பாரம்பரியமான நட்புறவுகள் மேலும் நன்கு வளர்ந்தோங்கும் என்றும் இந்த நட்புறவு இருதேச மக்களுக்கும் கூடியளவு நன்மை பயக்கும் எனவும் தெரிவித்துள்ளார் (அ)

## பஞ்சாப் தேர்தல் பற்றி

# ராஜீவ் காந்தியின் 8 அம்ச வழிகாட்டல் அறிவிப்பு

புதுடில்லி, ஆக-19

''பஞ்சாப் மாநில மக்கள் மாநிலப் பொதுத் தேர்தலில் முழுமூச்சுடன் பங்காற்றி விடுதலைப் போராட்டத்தின் நெறிகளுக்கு நம்பிக்கையூட்டும் வாய்ப்பினை ஏற்படுத்தவேண்டும்'' என்று இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி கேட்டுள்ளார்.

இந்திரா காங்கிரஸ் கட்சியினருக்கு பஞ்சாப் தேர்தல் பற்றி கட்சித் தலைவர் திரு. ராஜீவ்காந்தி வெளியிட்டுள்ள எட்டு அம்ச வழிகாட்டுதலில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

''தேர்தல் இயக்கத்தை ஒற்றுமை, வளர்ச்சி மற்றும் தற்காப்பிற்கான ஒரு மக்கள் இயக்கமாக மாற்றவேண்டும். அற்பசொற்ப அவதூறுகளுக்கும், கடந்தகாலப் பகைமை உணர்வுகளைத் தூண்டும் முயற்சிகளுக்கும் இடமகொடுக்கக் கூடாது.

ஜனநாயகத்திற்குக் கிடைத்த ஒரு சிறப்பான வெற்றியே பஞ்சாப் உடன்பாடு. இந்த உடன்பாடு இந்திரா காங்கிரஸின் சாதனை மட்டுமல்ல; நாட்டின் ஒற்றுமையிலும் ஒருமைப்பாட்டிலும் நம்பிக்கைகொண்டுள்ள அனைத்து சக்திகளின் பங்களிப்பினால் கிடைத்த பேறுகும்.

இவை யாவுக்கும் மேலாகப் பஞ்சாப்பியர்களின் அளவிட முடியாத ஆர்வம் தற்காலிகமான வேறுபாடுகளைக் கடந்து இந்த உடன்பாட்டு வெற்றியைப் பெற்றுள்ளது''.

### மொரார்ஜியின் திருப்தி

முன்னாள் இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் மத்திய அரசின் பஞ்சாப் மாநிலப் பொதுத்தேர்தல் முடிவுக்கும் ராஜீவ் - லோங்கோவால் பஞ்சாப் உடன்பாட்டிற்கும் வரவேற்பினைத் தெரிவிக்கும் தமது திருப்தியைத் நேற்று பம்பாயில்வைத்து வெளியிட்டுள்ளார். (அ)

## தென்னாபிரிக்க கலவரம்: இருவர் பலி! பலர் கைது!!

(லண்டன்)

தென்னாபிரிக்காவில் தொடரும் கலவரங்களையடுத்துமுதன்முறையாக ஒரே தடவையில் பலர் கைதாகியுள்ளனர் பெற்றோல் குண்டுவீச்சு, தீவைப்பு, வன்முறைச் சம்பவங்களை முறியடிப்பதில் கலகக்காரர்மீது பொலிசார் தீவிர அடக்குமுறைகளை மேற்கொண்டுள்ளனர்

பொலிஸ் வட்டார அறிக்கையில், கலகக்காரர்கள் பலர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், வன்முறைகளை அடக்கப் பொலிசார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இரண்டு கறுப்பர்கள் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## அசாம் மாநில சட்டசபை கலைக்கப்பட்டது!

### புதிய காபந்து அரசு பதவி ஏற்பு

(புதுடில்லி)

அசாம் மாநில அரசின் 30 மாதகால சட்டப் பேரவையை மாநில முதலமைச்சரின் ஆலோசனையின் பேரில் ஆளுநர் திரு. பீஷ்ம நாரய்ண்சிங் கலைத்துள்ளார்.

முதலமைச்சர் திரு. ஹிதேஸ்வர சைகியா மாநில ஆளுநருடன் நடத்திய பேச்சுக்களை அடுத்து சட்டசபை கலைக்கப்பட்டுள்ளதோடு மாநில அமைச்சரவைச் சேர்ந்த 20 அமைச்சர்களும் தமது ராஜினாமாவை ஆளுநரிடம் கையளித்தனர்.

இவற்றினை அடுத்து முதலமைச்சர் திரு சைகியா தலைமையிலான 17 அமைச்சர்களைக் கொண்ட காபாந்து அரசாங்கம் தற்போது பதவி ஏற்றுள்ளது.

திரு சைகியா தலைமையிலான காபாந்து அரசாங்கம் பதவி ஏற்றுள்ளமைக்கு அசாம் மாநில இயக்கத் தலைவர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர். தற்போதைய காபாந்து அரசின் அமைச்சர்களின் தொகையை மிகவும் குறைக்குமாறு இவர்கள் வற்புறுத்தியுள்ளனர்.

சட்டபேரவை கலைக்கப்பட்டதை அசாம் ஜனதாக்கட்சித் தலைவர் வரவேற்றுள்ளார், அதே வேளைகாபாந்து அரசின் அமைச்சரவையின் தொகை குறித்து கண்டனம் தெரிவித்தார்.

மேற்கு வங்க இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் திரு விசுவநாத் முகர்ஜி அசாம் உடன்பாட்டை எதிர்த்துள்ளார் இவர் நேற்று கல்கத்தாவில் வெளியிட்டுள்ள அறிக்கையில், அசாம் உடன்பாட்டின் விளைவாக ஏராளமான வங்காளிகள் நாடற்றவர்களாகிவிடுவார்கள் என்று குற்றம்சாட்டினார்.

இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அசாம் பிரச்னை தொடர்பாக செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் மாநில சட்ட சபையை கலைப்பதும் ஒன்றாகும். (அ)

## உலகச் செய்திகள்

## ஈரான் ஜனாதிபதி தேர்தல்: கொமேனி பெருவெற்றி

செஹ்ரான், ஆகஸ்ட் 19

ஈரானின் ஜனாதிபதி தேர்தலில் மதத் தலைவர் அயத்தொல்லாக்கொமெய்னி மீண்டும் அமோக வெற்றி பெற்றுள்ளார்.

ஜனாதிபதி தெரிவிற்கான பொதுத்தேர்தலில் பதிவாகி எண்ணப்பட்ட வாக்குகளில் அரைவாசிக்கு மேற்பட்டவை இவருக்கு அளிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வாக்குகள் இரண்டாவது தினமாக நேற்று எண்ணப்பட்டபோதே இந்தநம்பிக்கை ஊர்ஜிதமானது

இத்தசமயம் நேற்று தெஹ்ரான நகரில் இடம்பெற்ற கார்க்குண்டு வெடிப்பில் 30க்கும் அதிகமானவர்கள் படுகாயமடைந்ததோடு பல கார்கள் பலத்த சேதமடைந்தன என்று தலைநகர் பாதுகாப்பு வட்டார அறிக்கை கூறுகிறது

## மின்சேவை துண்டிக்கச் சென்றவருக்கு கிடைத்த 'பரிசு!'

(வண்ணார்பண்ணை)

யாழ்ப்பாண மாநகர மின்சார இலாகா ஊழியர்கள் ஆறு பேரை பெண்களும் ஆண்களுமாகத் தாக்கியதாகவும், காயப்படுத்தியதாகவும் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது

சனிக்கிழமை நண்பகல் கடமையில் ஈடுபட்டிருந்த போது இவ்வூழியர்கள் தாக்கப்பட்டதாகவும், இத் தாக்குதலில் பெண்களே அதிகமாகக் கலந்துகொண்டதாகவும் மேலதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் குருநகர் கொண்டேசடி ஒழுங்கையில் இடம்பெற்ற இச்சம்பவம் பற்றி யாழ் மாநகரசபை மின்பொறியியலாளருக்கு புகார் செய்யப்பட்டுள்ளது

மின்சார நிலுவைப் பணம் கட்டத் தவறியவர்களது மின் சேவைகளைத் துண்டிக்கச் சென்றபோதே இச்சம்பவம் இடம்பெற்றதாக புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது

குறித்த வீடொன்றில் மின் சேவை துண்டிக்கத் தடை ஏற்பட்டதாகவும் இதனால் ஒழுங்கையிலுள்ள மின்கம்பத்தில் கம்பத்தினூடாக குறித்த சேவையை துண்டிக்க முயன்றபோது பெண்களும் ஆண்களும் தாக்கமுற்பட்டதாகவும் உடைகள் கிழிக்கப்பட்டதாகவும் இச் சம்பவம் குறித்து யாழ் மாநகர சபைபிரதமமின் பொறியியலாளர் திரு வி. நவரத்தினராசா கவலை தெரிவித்துள்ளார்

ஒழுங்கான மின்விநியோகத்திற்கு பொதுமக்கள் தடையாக இருப்பது கவலைக்குரியதென்றும், இச்செயல்களால் நகரின் மின்விநியோகம் பாதிக்கும் நிலையில் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இப்படியான முறைகேடான நடவடிக்கைகள் மாநகரசபையையும் வரியிறுப்பாளர்களைப் பலவகையில் பாதிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

## சுவரொட்டிக்கு 'சோ' மறுப்பு

(சென்னை)

ஆபாச திரைப்படங்களை தயாரித்தது தொடர்பாக கைதுசெய்யப்பட்டு சிறைத் தண்டனை பெற்றுவரும் நடிகர் சுமனுக்கு பிரபல பத்திரிகையாளரும், வழக்கறிஞருமான 'சோ'வுக்கு இந்த படங்கள் தயாரிப்பதில் தொடர்பு இருப்பதாக தெரிவிக்கும் சுவரொட்டிகள் சென்னை நகரம் எங்கும் ஒட்டப்பட்டிருந்தன.

ஆனால் இந்தச் சுவரொட்டிகளில் குறிப்பிட்டுள்ளது போன்று சுமனுக்கும், தமக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லையென்று நடிகர் சோ குறிப்பிட்டார்.

இது தொடர்பாகத் தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு திரு. சோ சென்னைப் பொலிஸைக் கேட்டுள்ளார்.

## யாழ். பல்கலைக்கழக பட்டப் பின் படிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழகம் தொடங்கவிருக்கும் பட்டப் படிப்பின் பின்பகுதி நேரக் கல்வி டிப்ளோமாத் துறைக்கு 300க்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் இதுவரை கிடைத்துள்ளதாகவும், மேலும் விண்ணப்பங்கள் இம்மாதம் 30ம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் எனவும் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் அறிவித்துள்ளார் (ச)

## 50 வது ஆண்டு விழா

(கொழும்புத்துறை)

அரசாங்க பொதுச் சேவைத் தொழிலாளர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும், ஐம்பதாண்டு நினைவு தினவிழவும் இம் மாதம் 30ம் திகதி கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நடைபெறும்.

இவ் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் அரசாங்கப் பொதுச்சேவைத் தொழிலாளர் சங்க யாழ். கிளையைச் சேர்ந்த 50 பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

## மண்டைதீவு சித்திவிநாயகர் மகோற்சவம்

(மண்டைதீவு)

மண்டைதீவு திருவெண்காடு ஸ்ரீசித்திவிநாயகர் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் இம்மாதம் 21-ம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது

பத்துத்தினங்கள் நடைபெறும் இவ்வுற்சவத்தின் 29-ம திகதி தேர்த்திருவிழாவும் 30-ம திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும்.

10 தினங்களும் கதாப்பிரசங்க நிகழ்ச்சிகளும் இடம் பெறும்

### மணிவாக்கு

பேராசையைப் போக்க நினைத்தால் அதன் தாயாகிய படாடோபத்தை ஒழிக்க வேண்டும்.

—ஸிஸரோ

# நமது நோக்கு

## கொலையை நிறுத்து; பேச்சைத் தொடர்!

அமெரிக்காவின் சிறந்த விடுதலை வீரன் ஆபிரகாம் லிங்கன். அசையாத மத பக்தி கொண்டவன்: சமயத்துக்கேற்ற சமயம் என்பது அவனறியாத பண்டம். உறுதிபட்ட நெஞ்சுடைய வீரன். இம்மியும் நகராது நல்ல தலைவனாய் வாழ்ந்தான்.

அமெரிக்காவில் உள்நாட்டுப்போர் கடுமையாக நடந்தபோது, அவன் கொண்ட கோட்பாட்டுக்கு பொறுத்த பரிசோதனை. அடிமை வியாபாரத்தை அறவே ஒழிக்க சபதம் கொண்ட லிங்கனை பலர் இகழ்ந்தார்கள். காறித் துப்பினார்கள்; கொல்ல முயன்றார்கள்; எதற்கும் சளைக்காமல் பணி புரிந்து உயர்ந்தான் மாவீரன் ஆபிரகாம் லிங்கன்.

அமெரிக்காவின் முதல் ஜனாதிபதியாயிருந்த சிறந்த அரசியல் மேதை ஜார்ஜ் வாஷிங்டன். காங்கிரஸ் தன்னை அநியாயமாக எதிர்த்தபோதிலும் அவன் கலங்கவில்லை. எடுத்த செயலை முடிப்பதில் உறுதி தளராமல் மலைபோல நிமிர்ந்து நின்று மிகச்சிறந்தான் ஜார்ஜ் வாஷிங்டன்.

இன்று எங்கள் மக்களுக்கு உற்சாகம் அளிக்க இத்தகைய பழைய 'புராண'க் கதைகள் மீட்கவேண்டியது அவசியமாகின்றது.

பழையது மட்டுமல்ல தொடர்பற்ற சம்பவங்கள் போலவும் தோன்றும் அப்படியல்ல; சுதந்திரம், மக்கள் ஆட்சி என்றமகத்தான வாழ்க்கை முறையை உலகுக்கு சடுதியில் ஏற்படுத்திய 'புதிய உலகம்' அமெரிக்கா. இது ஒரு புறம்; மற்றையது இன்றைய அமெரிக்காவில் மக்கள் ஆட்சியின் மணம் குணம் மாறியிருப்பது மறுபுறம்.

இந்த முரண்பாடு இன்றைய நவயுகத்தில் அதிசயமானதல்ல. அதற்கொரு சிறு விளக்கம் எங்கள் நாடே உதவுகிறது. பார்க்கப்பரிகாசம்போல இருக்கும்; இருந்தும் ஆழமாய்ப்பார்த்தால், பாம்பின்கால் இலகுவில் புரியும்.

அன்று அமெரிக்கமிஷனரிமார் இலங்கை வந்ததும் வறண்ட யாழ்ப்பாணத்துக்கே போக அனுமதியும், ஆதரவும்கிடைத்தது. செல்வம் செல்வாக்குள்ள மற்றைய மிஷனரி இயக்கங்கள் தலைநகரிலும் அது போன்ற சுகவாழ்வுடைய நகரங்களிலும் வரவேற்கப்பட்டன; இதுவே யாழ்ப்பாணத்தவர் கல்வியில் தலைமை கொள்ள உதவியது. அந்தோ ஆழமான ஆராய்ச்சி இது.

வறண்ட யாழ்ப்பாணத்துக்கு ஆங்கில (கல்லூரி)ப் படிப்பை அறிமுகப்படுத்திகுடா நாட்டை ஒரு அறிவுக்களஞ்சிய மாக்கினர் அமெரிக்க மிஷனரிமார் என்பதும் அதன் விளைவே இன்று நாட்டை பீடித்திருக்கும் உள்நாட்டுப் போர் என்பதும் இன்றைய ஆராய்ச்சி. தமிழர் கொல்லப்படுவதற்கும் நாடு கடத்தப்படுவதற்கும் இது தானா காரணம்?

விபரீதம்போல் தோன்றினாலும் இதில் விடயம் இல்லாமலில்லை.

தமிழ்மக்கள் உரிமைகள், இன்று உயிர்பாதுகாப்பு-என்ற இயக்கத்துக்கு யாழ்ப்பாணமே பிறப்பிடம் என்பது ஒன்று இதுவாறும் பிரிட்டிஷ் ஆட்சியில் மட்டற்ற சலுகைகள் பெற்றவர் தமிழரே; இரண்டு: சுதந்திர ஆட்சியில் இந்த ஒழுங்கீனத்தையும், சமத்துவமின்மையையும் சமாளிக்கவே சில நடவடிக்கைகள். பௌத்தம் இருந்த இழிநிலையை மீட்கவேண்டும்; சிங்களமக்கள் இழந்த உரிமைகளை மீட்கவேண்டும். இதற்கொரு தற்காலிக எதிர்ப்புக் கிளம்பும்; அதனை முறியடிக்கலாம் என்ற துணிவு.

நாம் குறிப்பிடும் இப்பொழிப்புரை இன்று நாட்டைக் கெடுத்துவரும் நீண்டகால சிவில்போருக்கு வித்திட்டிருக்கிறது.

எங்கு சிவில்போர்? தமிழ்மக்கள்தானே கொலைப்படுகிறார்கள் என்ற எதிர்ப்பும் கிளம்பும்; அப்படியல்ல அரசாங்கத்தின் உறுதியற்ற ஆட்சிக்கு சவாலாக இன்றைய போராட்டம் இருந்தபோதும், எங்கும் சிங்கள-தமிழ் மக்கள் போர் என்ற குறிக்கோளற்ற போர் பரவுவதற்கு பெரிய புயல் ஒன்று தேவையில்லை.

இவ்வித போரைத் தடுக்க இன்று நடைபெறும்கோரக் கொலையை உடனடியாக நிறுத்த இந்தச் சின்னத்தில் லிங்கன், வாஷிங்டன் போன்றோரை நாம் எவ்வாறு எதிர்பார்ப்பது.

தங்கள் ஆட்சியைப் பாதுகாக்க பிரயத்தனம்செய்பவரும், இந்த நெருக்கடியில் ஒரு தேர்தல் நடத்தி ஆட்சியைக் கைப்பற்ற ஆசைப்படுபவரும், இரத்தக் களரியை நிற்பாட்டுவதில் நாட்டம் கொள்ளார்.

திம்புவில் ஒரு சமாதானப் பேச்சை ஒழுங்குபடுத்திய அரசியல்ஞானம் இந்தியப் பிரதமரின் உறுதிகொண்ட முயற்சியின் விளைவு.

அப் பேச்சுக்கள் அங்கு முறிந்ததற்கு இங்கு நடைபெறும் (தற்)கொலையே காரணம்.

பேச்சு விரைவில் சமாதானம்கண்டால், கொலை நிறுத்த வழிபிறக்கும். மற்றொரு பார்வையில் கொலை நிறுத்தப்பட்டால்தான் பேச்சு தொடரவும் முடிவு காணவும் முடியும்.

அழிவுக்கு நேர்வழியே இத் தர்மசங்கடம். இந் நாட்டில் வாழும் தமிழ் மக்கள் பேரில் "சமாதான முயற்சி தொடரவேண்டும், எவ்வித தயக்கமுமின்றி பாரதம் யுத்தநிறுத்தத்துக்கு உறுதியான மத்தியஸ்தம் வகிக்கவேண்டும்" என்ற குரலை எழுப்புகின்றோம்.

இன்றைய வாஷிங்டனை லிங்கனை பாரதப் பிரதமரில் காண்கின்றோம் என்றால் நோயுற்று நலிந்திருக்கும் நீகன் நிச்சயம் பூரிப்படைவார்.

# அடியவர்தம் பிணி தீர்க்கும் அற்புதம்சேர் ஆலயம்

### பெரி. மாணிக்கவாசகர்

வடமருங்கை எள்ளங்குள நாச்சிமார் ஆலயம் இற்றைக்கு மூன்று சந்ததிகட்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. இந்த ஆலயத்தை ஆரம்பித்தவர் வேலர் என்று சொல்லப்படுகின்ற பக்திமானே ஆகும். இங்கு சொல்லப்பட்ட நாச்சியம்மன் ஆலயத்திற்குச் சற்றுத் தொலைவில் பற்றையடி அம்மன் என்று ஓர் ஆலயம் இருக்கிறது. இவ்வாலயத்தில் வருடாவருடம் வரும் வைகாசி முதல்வெள்ளிக்கிழமை பொங்கல் விழா நடைபெறுவது வழக்கம். இப்பொங்கல் விழாவிற்கு வேலர் என்கின்ற பக்திமான் ஒருவரும் பொங்கல் செய்து வந்தார் குறிப்பிட்ட ஒரு வைகாசி வெள்ளியில் பொங்கல் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது பெரிய இடிமுழக்கத்துடன் கூடிய மழையொன்று பெய்தது. இந்த மழை காரணமாக அன்று நடைபெற்ற பொங்கல் மழையில் நனைந்து அரையும் குறையுமாக நடந்து முடிந்தது. வேலர், பொங்கல் மழையினால் பாதிக்கப்பட்டதினால் துயரம் மேலிட வீடுவந்து சேர்ந்தார். வீட்டுக்கு வந்தவர் பொங்கலை ஓரிடத்தில் வைத்து விட்டு யாருடனும் ஏதும் கதைக்காது படுத்துவிட்டார். அன்றிரவு அம்மன் அவருக்குச் சொற்பனத்தில் தோன்றி—"பக்தா! நடந்த இரவு எனக்குப் பொங்கல் சரிவர நடைபெறவில்லை. அதனால் நீ கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறாய்; நீ கவலைப்படாதே. நீ என்னை உனக்கு விரும்பிய ஓரிடத்தில் வைத்து ஆதரித்து வருடம் தோறும் இத்தினத்தில் பொங்கல் செய்" எனக் கூறி மறைந்தருளினார். இதைக் கேட்ட வேலர் மெய்சிலிர்க்க ஆனந்தக் கண்ணீர் பெருக நின்றார்.

அவரால் ஆரம்பிக்கப்பெற்ற ஆலயம் அருகில் இரண்டு கொட்டில்கள் அமைத்து வழிபட்டு, காலப்போக்கில் அம்மனின் அருளாலும், அடியார்களின் முயற்சியாலும், கொட்டிலில் இருந்து நாச்சியம்மன் சிறுகட்டடத்திற்குள் குடிபுகுந்தாள். கொட்டிலில் பிறந்து சிறுகட்டடத்திற்குள் வளர்ந்து, இன்னும் பெரும் கட்டடத்திற்குள் நின்று மகா கும்பாபிஷேகம் காணும் நிலை அம்பாளின் புதுமையைக் காட்டி நிற்கிறதல்லவா?

இக்கோயிலில் இன்னும் பல புதிர்கள் நிகழ்ந்த வண்ணம் இருக்கின்றன. இக்கோயிலின் சுற்றுாலல்களில் வாழும் கிராமங்களின் மக்களில் யாருக்கும் ஏதும் சுகவீனம் ஏற்பட்டால் மருத்துவமனைக்குசெல்வதில்லையாம். முதலில் அந்த நோயாளியை நாச்சி அம்மனுக்கு கூட்டிச்சென்று பூசை செய்வித்து வீபூதி பூசக் கொடுப்பார்களாம். இது நடைபெற்றுஇரண்டு மூன்று தினங்கட்குள் அந்தநோய் மாறிவிடுகிறதாம். இந்த நம்பிக்கை அம்மக்கள் மத்தியில் நன்றாக பதிந்து இருக்கிறது.

மேலும் ஏதாவது ஒரு புது விடயம் ஒன்று செய்வதானால் அவ்வூர் வாசிகள் முதலில் நாச்சியம்மனிடம் சென்று சொல்லுவார்களாம் - அதில் நாச்சியம்மாள் சரியென்று சொன்னால்தான் அந்த விடயத்தை செய்வார்களாம் இல்லையேல் அந்த காரியத்தை தொடங்கமாட்டார்களாம் இந்த விடயத்தை பூ கட்டி வைத்துப் பார்த்தல் மூலம் அக்காரியத்தை செய்வதா? இல்லையா என்று முடிவு செய்கிறார்கள். பூக்கட்டி வைத்தல் மூலம் மறுப்பு ஏற்பட்டால் அந்தக்காரியத்தை செய்ய மாட்டார்களாம்.

இக்கோயில் சைவசமயத்தின் வரலாறுடன் கூடிய எல்லா விழாக்களும் இடம் பெறுவதுண்டு வைகாசியில் வரும் முதல் வெள்ளியில் பொங்கல் விழா வெகுகோலாகலமாக நடைபெறுவதுண்டு: இப்பொங்கல்விழா சிறப்பாக நடைபெற்றால் அந்தவூரில் மக்கட்கு நோய், நொடி, கிட்டாதெனவும் ஊர் செழிக்க மழை பொழியுமெனவும் அக்கிராம வாசிகள் நம்புகிறார்கள் - இதைவிட நவராத்திரிவிழாவும் திருவம்பாபூசையும் மிகவும் சிறப்பாக நடைபெறுவதுண்டு.

இவ்வாலய மகா கும்பாபிஷேகம் இம் மாதம் 22-ம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

---

மாவை

### ஸ்ரீஇராஜராஜேஸ்வரி அலங்காரத் திருவிழா

(யாழ்ப்பாணம்

மாவிட்டபுரம் வீணியவரை ஸ்ரீ இராஜராஜேஸ்வரிஅம்பாள் தேவஸ்தானம் அலங்கார உற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகிப் பன்னிரண்டு தினங்கள் நடைபெறும்.

# சமயமும் அரசியலும் உண்டுபண்ணும் குழப்பம்

## மக்கள் கருத்து

சமயங்கள் மக்களுக்கு வாழ்வையும் வளத்தையும் அளிக்கவென உருவாக்கப்பட்டனவேதவிர மக்கள் மத்தியில் பேதமையையும் பிளவையும் உண்டாக்குவதற்காக உருவானவையல்ல. ஆனால் அரசியலைப் பொறுத்தளவில் அதன் அடிப்படை நோக்கம் நற்சேவை புரிதலாகவிருந்தாலும் கூட, அரசியல் செயற்பாட்டில் பேதங்களும் பிளவுகளும்ஏற்படுவது தவிர்க்க முடியாது. இந்நிலையில் அரசியல்வாதி தன்மனநிறைவுக்காக ஆன்மீக வாதியாகச் செயற்படமுடியுமே தவிர ஒரு ஆன்மீகவாதி என்றுமே அரசியல்வாதியாக முடியாது. காந்தியடிகளால் அரசியலில் இருந்து கொண்டு ஆன்மீகவாதியாக வாழமுடிந்தது. இன்றும் நேர்மையான அரசியல்வாதிகள் அங்ஙனம் வாழ முடியும். இலங்கையைப் பொறுத்தளவில் சேர். பொன். இராமநாதன் அரசியல்வாதியாக இருந்து கொண்டு ஆன்மீகப் பணியாற்றிவர். ஆனால் காந்தி அரசியல்வாதியாக இருந்து கொண்டு ஆன்மீகவாதியாக மிளிர்ந்தார். என்பதற்காக காஞ்சி காமகோடிகள் அரசியலுக்குள் பிரவேசித்திருந்தால் அவரால் எதையாவது சாதிக்க

(5-ம் பக்கம் பார்க்க)

## மயில்மீது வரவேண்டும்

கந்தா நீ மயில்மீது வரவேண்டும்
நல்ல காட்சி நீ எமக்கருளித் தரவேண்டும்
தீவினைகள் எமை விட்டகன்றிடவே—நல்
திருவருளை எமக்கருளித் தர வேண்டும்,

வாய்விட்டு உமை நாமும் போற்றிடுவோம்
நல்ல வழியொன்றை நீ எமக்கு காட்டிடுவாய்
துயரங்கள் எமை விட்டு அகன்றிடவே—நல்
துணை நின்று எமை நீயும் காத்திடுவாய்

—சாந்தி கோவிந்தசாமி

★ நாளை நல்லூர்க் கந்தன் கொடியேற்றம்

## என்றும் அருள் விநாயகரே

அரியாலை யில்வீற்றி ருக்கும் இறைவா!
அரியன செய்தருளும் சோதியே!—தங்களுக்கு
தூயகொடி யேற்றித் திருவிழா செய்தருளை
ஈயஎமக் கென்றும் அருள்.

அன்றுமகாத் மாகாந்தி உன்னைவ ணங்கிட
அன்புடன அருள்நல்கி யுய்வித்த—ஈசனே!
இன்றும்மை அன்புடன்தொ ழும்பக்த ருக்குவேண்டும்
நின்னருளை யென்றும் அருள்.

—கண்டிக்குளி க. யோகராசா

(இன்று அரியாலை ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில் கொடியேற்றத் திருவிழா)

யாழ். பல்கலைக்கழக

# சித்த மருத்துவ துறைக்கு அதிகமானோர் விண்ணப்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ பீடத்துக்கான விண்ணப்பங்கள் சென்ற ஆண்டிலும் பார்க்கக் கூடுதலாக இவ்வருடம் வந்து சேர்ந்துள்ளன.

விண்ணப்பங்களை செப் 15ம் திகதிவரை அனுப்பலாம் என அறிவிக்கப்படுகிறது. 1983 1984 காலப்பகுதிகளில் நடைபெற்ற க. பொ. த. (உயர்தர) விஞ்ஞான பரீட்சையில் ஒரே அமர்வில் தாவரவியல், விலங்கியல், பௌதிகவியல், இரசாயனவியல் ஆகிய பாடங்களில் சித்தியடைந்தவர்களே இத்துறைக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இம்மருத்துவத் துறைக்கான பயிற்சி முன்னர் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடம் அமைந்திருந்த கைதடிக்கட்டிடங்களில் நடைபெறுமெனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# கல்விச் சேவையை வியாபாரமாக்காதீர்

## — வட்டாரக் கல்வி அதிகாரி

(யாழ்ப்பாணம்)

''இன்று கல்விச்சேவை வியாபாரமாக மேற்கொள்ளப்படுவது ஆரோக்கியமான சமுதாய வளர்ச்சிக்கு ஏற்றதல்ல. கல்விப்பணி ஒருபுனித பணியாக மேற்கொள்ளப்பட வேண்டும். மாணவர்கள் எக்காரணம் கொண்டும் தம் கல்வியைத்தொடராது இடைநிறுத்தக்கூடாது. இது எதிர்கால வளர்ச்சியை, முன்னேற்றத்தை அழிக்கும்'' என்று கோப்பாய் வட்டாரக்கல்வி அதிகாரி திரு. வி. தங்கராசா சேவைநலன் பாராட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் கூறினர்.

கோப்பாய் தெற்கு றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையில் 16 ஆண்டுகளாக அதிபராகக் கடமை புரிந்து அண்மையில் ஓய்வு பெற்றுள்ள திருமதி பீ. சோமசுந்தரத்திற்கு அளிக்கப்பட்ட சேவைநலன் பாராட்டு வைபவம் பாடசாலையின் புதிய அதிபர் திரு கே கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. இவ்வைபவத்தில் வட்டாரக்கல்விஅதிகாரி திரு. வி. தங்கராசா, கோப்பாய் தெற்கு, பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக்கூட்டுறவுச் சங்க கணக்காளர் திரு எஸ் ஜே. இம்மனுவேல், கோப்பாய் தெற்கு பங்குத்தந்தை வண பிரான்சிஸ் குலாஸ், திரு. எம். கே. இளையப்பு ஆகியோர் உட்பட பலர் பாராட்டுரைகளை வழங்கினார்கள்.

பாடசாலை பழைய புதிய மாணவர்களினது கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (ச)

## சமயமும் அரசியலும்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

முடிந்திருக்குமா என்பது கேள்விக்குறியே. ஆனால் நிச்சயமாக இந்தியாவில் இந்து சமயம் சாக்கடைக்குள் போயிருக்கும்.

இத்தகைய சிந்தனையோட்டத்தை இலங்கையிலுள்ள பெரும்பான்மைச் சமயவாதிகள் புரிந்து கொள்ள மறுப்பது வேதனைக்குரியது. சமயத்தலைவர்கள் அரசியலை நடத்த முற்பட்டால் இலங்கையில் என்றுமே ஒற்றுமை ஏற்பட முடியாது என்பது வெள்ளிடைமலை. ஏனெனில் இலங்கையில் முக்கியமாக நான்கு சமயத்தவர்கள் பண்டுதொட்டு வாழுகின்றார்கள். இவர்கள் இலங்கையர்கள் என்ற உணர்வோடு சிந்திக்கமறுத்து சமயரீதியில் சிந்திக்கப்புறப்பட்டால் இந்நாட்டின் நிலை என்ன என்பதை எல்லோரும் சிந்திக்கவேண்டும். இலங்கையில் ஏற்பட்டுள்ள இனப்பிரச்சினைக்குரிய தீர்வைக்காண்பதற்கு பௌத்த மக்கள் சார்பில் புத்தபிக்குகளின் கருத்துக்கள் கவனிக்கப்படவேண்டும் என கூறப்படுகின்றபோது இங்குள்ள கிறீஸ்தவர்கள் தங்கள் சார்பில் பாப்பாண்டவரின் கருத்தும். முஸ்லீம்கள் சார்பில் மக்காமேலிடத்தின் கருத்தும் இந்துக்கள் சார்பில் காஞ்சிகாம கோடிகளின் கருத்தும் கவனிக்கப்பட வேண்டும் என்றும் கூறும் நிலைப்பாடுகள் இலங்கையெங்கணும் உருவாகுமயிருந்தால் எங்ஙனம் பிரச்சனைக்குத் தீர்வு காணமுடியும்.

கடந்த முப்பது ஆண்டுகளாக இழுபட்டுவரும் இலங்கையின் இனப்பிரச்சனையில் காலத்துக்குக்காலம் பெரும்பான்மைச் சமயவாதிகள் தலையிட்டுவந்தும் பிரச்னை தீராத நோயாக இருந்து வருவதில் இருந்தாவது தமது நிலைப்பாட்டை மறுபரிசீலனை செய்ய சம்பந்தப்பட்ட சமயவாதிகள் முன்வரவேண்டும். களத்தில் கிடந்த உயிரற்ற உடல்களைக் கண்டுமனம் மாறி சமயப்பணி ஆற்றப்புகுந்தான் என்பதுதான் சரித்திரமே தவிரசமயத்தைப்பரப்புவதற்காக அவன் அரசு கட்டிலைப்பிடிக்கப் போகவில்லை.

அரசியலாளர் சமயத்தை அனுட்டிப்பவர்களாக இருக்க வேண்டுமே தவிர சமய வெறியும் பற்றும் மிக்கவர்களாக என்றும் இருக்கக் கூடாது.

சமய உணர்வுகளைத்தூண்டுவது சுலபமாகத் தெரியலாம் ஆனால் முடிவு எத்தகைய விபரீதமாகும் என்பதை உலக சரித்திரத்தில் இருந்து நம்மவர்கள் படிக்க வேண்டும். சமயஉணர்வின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட சீர்கோலங்களையும், படுகின்ற அனர்த்தங்களையும் தாம் பார்த்துக்கொண்தானே இருக்கிறோம்? தமது சொந்தச் சமயத்தவர்களையே மொழி தேபத்தால் கற்பழித்த செயல்களை பாகிஸ்தான் - பங்களா தேஷ் யுத்தத்தில் நாம் கண்ணால் கண்டோம். சமயவாதி கொமேனியின் தலைமையில் ஈரான் படும் சீர்கோலங்கள் தான் எம்மட்டு? ஏன் இலங்கையிலும் கூட இன்றைய பிரச்னைக்கு மூலகாரணம - பெரும்பான்மையோரிடம் சமய உணர்வு விஞ்சி நிற்பது தான் என்றால் அதில் தவறில்லை. அதிகார பீடத்தில் இருப்பவர்கள் விரிந்தமனப்பான்மையோடும் விட்டுக்கொடுக்கும் உணர்வோடும் செயற்பட வேண்டும். 1977 ல் சமாதானம் என்றால் சமாதானம் போர் என்றால் போர் என்றார்கள். இன்று 'திம்பு' பேச்சு தோற்றால் யுத்தத்துக்கு நாடு தயாராக வேண்டும் என்கிறார்கள்.

ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம் சமயவாதிகள் அரசியலை ஆட்டிப்படைக்கும் மட்டும் சௌஜன்யம் நிலவ முடியாது. அரசியல்வாதிகள் சமயவெறியில் உழலுமட்டும் சகோதரத்துவம் மிளிர முடியாது இதை உணர்ந்து சம்பந்தப்பட்டவர்கள்சரியான நிலைப்பாட்டுக்கு வரவேண்டியது அவசியம்,

— எஸ். கே. மகேந்திரன்.

நாளை ஆரம்பமாகும் நல்லூர் உற்சவம்

# உற்சவம் சிறப்புற நடைபெற ஆணையாளர் ஒத்துழைப்புக் கோருகிறார்

(வண்ணார்பண்ணை)

''எதிர்வரும் நல்லூர் உற்சவ காலத்தொண்டர் சேவையிலும், பாதுகாப்புச் சேவைகளிலும் ஈடுபடும் சகல அமைப்புகளும் கண்ணிமாகவும், பொறுப்புணர்ச்சியுடனும், கடமையுணர்வுடனும், ஒற்றுமையுடனும் செயற்படவேண்டும். சேவையும் தொண்டும் எமது இலட்சியங்களாக இருப்பதுடன் உற்சவம் சிறப்புடன் நிறைவுபெறுவதை எமது நோக்கமாகவும் கொண்டு இயங்கவேண்டும்'' என்று நல்லூர் உற்சவகால ஏற்பாடுகள் தொடர்பாக நடைபெற்ற தொண்டர்சேவைப்பிரிவுகளுக்கான ஆலோசனைக் கூட்டத்திற்கு தலைமைதாங்கி உரையாற்றிய யாழ். மாநகர ஆணையாளர் திரு. சீ. வி. கே. சிவஞானம் தெரிவித்தார். நல்லூர் இந்து விடுதியில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தொண்டர் சேவை அமைப்புகளின் பிரதிநிதிகளும், மாநகர சுகாதார, பாதுகாப்பு பிரிவுகளும் கலந்துகொண்டன.

யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவைத் தொண்டர் பிரிவுகளும், சாரணர் இயக்க தொண்டர் பிரிவுகளும், சென் ஜோன் அம்புலன்ஸ் பிரிவினரும் ஏனைய இந்து ஸ்தாபனங்களின் பிரதிநிதிகளும் இக்கூட்டத்தில் ஆலோசனைகளைத் தெரிவித்தனர்.

ஆணையாளர் தொடர்ந்து பேசுகையில்: ''எமது இடர்கள் தீர நல்லைக்கந்தன் உற்சவம் சிறப்பாக நிறைவுபெற வேண்டும். இதற்கு சகல இந்து அமைப்புக்களும் தொண்டர் பிரிவுகளுக்கு சகல உதவிகளையும் வழங்கவேண்டும். தங்களைத்தாங்களே ஒழுங்குபடுத்தும் முறையை ஒவ்வொருவரும் கடைப்பிடிப்பதன் மூலம் எமது நோக்கில் வெற்றிகாண முடியும். இதற்கு நாம் அனைவரும் தொண்டர்களாக எம்மை ஆக்கிக்கொள்ள வேண்டும்'' என்றார்.

உற்சவ காலத்தில் பாதுகாப்பும், அவதானிப்பும் மிக அவசியமானதாகும். உற்சவ பாதுகாப்பையும், வீதி ஒழுங்குகளையும் முன்னிட்டு வழமைபோல் ஐந்து கடை முகாம்கள் இயங்கவிருப்பதாகவும் இத்தடை முகாம்களில் தகுதிவாய்ந்த தொண்டர்கள் கடமையாற்ற வேண்டுமென்றும் அவர் சொன்னார்.

## மோட்டார்சைக்கிள் விபத்தில் பலியானார்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு - சில்லாலை வீதியில் நிகழ்ந்த மோட்டார் சைக்கிள் விபத்தில் 18 வயதுடைய இளைஞர் பலியானார், பண்டத்தரிப்பு அம்மன் வீதியைச் சேர்ந்த திருச்செல்வம் ராஜன் என்பவரே இவ்வாறு மரணமானவராவார். இவரும் மற்றுமொரு இளைஞரும் மோட்டார் சைக்கிளில் பண்டத்தரிப்புச் சந்தி நோக்கி வந்து கொண்டிழிந்தபோது சில்லாலை கத்தோலிக்க சேமக்காலைக்குப் பக்கத்திலுள்ள தந்திக் கம்பம் ஒன்றில் மோட்டார் சைக்கிள் மோதியதாகவும், மண்டை உடைந்த நிலையில் இவரையும், படுகாயங்களுக்குள்ளான மற்றையஇளைஞரையும் உடனடியாகக் கொண்டுசென்று யாழ். அரசினர் வைத்தியசாலையில் அனுமதித்ததாகவும், அங்கு அவசர சிகிச்சையளிக்கப்பட்ட பின்பு அவர் மரணமடைந்ததாகவும் இதுபற்றித் தெரிவிக்கப்படுகின்றது. மரண விசாரணையின் பின்பு சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. காயமடைந்த மற்றைய இளைஞர் அகஸ்ரின் ரெலன்ஸ் என்பவர் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றார்.

## கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி அருள்மிகு கந்தசாமி ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 21-ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. திருவிழாக் காலத்தில் தினமும் மாலையில் சைவசமயச் சொற்பொழிவுகளையும் பஜனை நிகழ்ச்சிகளையும் நடாத்துவதற்கு கிளிநொச்சி திரு. நெறிக்கழகத்தினர் உரிய ஒழுங்குகளை செய்துள்ளனர். (ச)

## உற்சவ காலத்தில் இந்து இளைஞர் சேவை

(வண்ணார்பண்ணை)

''எம்மை எதிர்நோக்கியுள்ள இடர்களையும், இன்னல்களையும் நீக்கி அமைதியும் சமாதானமும் ஏற்பட இடைவிடாத இறைவழிபாடு எமக்கு மிக அவசியமானதாகும். எதிர்வரும் மாதம்உற்சவ காலங்களாக இருப்பதால் இந்து இளைஞர்கள் பரந்த அளவில் தமது சேவைகளை ஆற்றக் கடமைப்பட்டுள்ளனர்'' என்று யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் ஆட்சிக் குழுக் கூட்டத்திற்கு தலைமை வகித்து உரையாற்றிய மேற்படி பேரவைத் தலைவர் திரு தி சி. சண்முகலிங்கம் தெரிவித்தார்.

நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் ஆலய உற்சவ காலத்தொண்டர் சேவைகள் தொடர்பான பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

ஒவ்வொரு பகுதிகளிலும் உள்ள ஆலயங்களில் உற்சவ கால சேவைகளில் அவ்வூர் பகுதி இந்து இளைஞர் மன்றங்கள் தொண்டர் சேவைகளில் ஈடுபடுத்தப்படவேண்டும் என்றும், நல்லூர் உற்சவகால சேவையில் நல்லூர் பிரதேச இந்து இளைஞர் மன்றங்களும், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனமும் இணைந்து சேவையில் ஈடுபட வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

முக்கியமான உற்சவங்களில் பாதுகாப்பைக் கருதி பேரவையின் ஏனைய மன்றங்களின் சேவையும் கோரப்படும் என்றும் இத்தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டது.

இந்துசமய சேவையின் புனிதத்தன்மையை இழக்காது சேவை உணர்வும், ஒற்றுமையும் எமது கடமைகளுடன் இணையவேண்டும் என்றும் இக்கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

நல்லூர் உற்சவம் சிறப்பாக நடந்தேறச் சகல சேவைகளையும் ஒன்றிணைத்து, பக்தர்களுக்கான முழுமையான வசதிகளைச் செய்யும் பணியில் ஈடுபட்டுவரும் யாழ் மாநகர ஆணையாளருக்கு நன்றியும், பாராட்டும் தெரிவிக்கும் தீர்மானமும் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

கடைசி நேர

விளம்பரம்

தேவை

கிரைண்டிங் மில்லில் அனுபவமுள்ளவர்கள் தேவை நேரில் வரவும். மஞ்சு கிரைண்டிங் மில், புளியங்கூடல் சந்தி, ஊர்காவற்றுறை. 146

உ

திருமண அழைப்பு

நிகழும் குரோதன வருடம் ஆவணி மாதம் 5ம் திகதி (21-08-85) புதன்கிழமை காலை 8-00 மணி தொடக்கம் 9-43 மணிவரையுள்ள கன்னி லக்கின சுபவேளையில்,

| | |
|---|---|
| எமது சிரேஷ்ட புத்திரன் திருநிறை செல்வன் **மகேஸ்வரன்** அவர்களுக்கும் [பொறியியலாளர் ஆசியான் தொழில் நுட்பக் கழகம், பாங்கொக், தாய்லாந்து] | எமது கனிஷ்ட புத்திரி திருநிறை செல்வி **றஜனி** அவர்களுக்கும் |

மணமகள் இல்லத்தில் நடைபெறும் திருமணத்திற்குத் தாங்களும் சுற்றஞ்சூழ வருகைதந்து மணமக்களை வாழ்த்தியருளும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை விரும்பும்

| | |
|---|---|
| திரு. திருமதி ம. பொ. செல்வரத்தினம் [சமாதான நீதவான்] ''செல்வ மஹால்'' சண்டிலிப்பாய். | திரு. திருமதி செ. இரத்தினம் ''சிவகிரி'' ஏழாலை மத்தி, ஏழாலை. |

(151)

# பி. பி. ஸி. பொய் கூறுகிறதாம்!

## — அமைச்சர் அல்விஸ்

(கொழும்பு)

பி. பி ஸி செய்திகள் சிங்கள மக்களுக்கும் இலங்கை அரசாங்கத்துக்கும் எதிரானவை என்று அமைச்சர் கலாநிதி ஆனந்த திஸ்ஸடி அல்விஸ் தெரிவித்தார்.

பயங்கரவாதத்தை ஊக்குவிக்கவே அச்செய்திகள் உதவுகின்றன. அமைதிபற்றி குறிப்பிடுவதைவிட அழிவு பற்றி விமர்சித்து லாபம் பெறமுயலுகின்றன.

இப் பணியிலேயே அண்மையில் ஐரிஷ்பயங்கரவாதிகளுக்கும் பி. பி. ஸி முக்கியம் கொடுக்க முன்வந்தது. அதைப்போன்றே இலங்கைச்சம்பவங்களையும் அது திரித்துக் கூறி பயங்கரவாதத்தை ஊக்குவிக்கிறது. என்று நேற்றைய பத்திரிகையாளர் மகாநாட்டில் அவர் மேலும் கூறினர்.

## நாவலர் சிலை இடமாற்றம்:

# நல்லை மணி மண்டபம்: தொடர்ந்து இயங்கும்!

(சுன்னாகம்)

நாவலர் கலாசார மண்டபத்தில் நாவலர் சிலை வைக்க வேண்டும் என யாழ். மாநகர சபை ஆணையாளர் நாவலர் சபைக்கு விண்ணப்பித்தார். சபை ஆலோசனை செய்து நல்லூரில் இருந்த சிலையை இடம் மாற்றி வைப்பதாக முடிவு செய்யப்பட்டுள்ளது. எனினும் நல்லூர் நாவலர் மணி மண்டபம் தொடர்ந்தும் முன்போல பணிகளைச் செய்யும்.

மேற்கண்டவாறு நேற்றுக் காலை நல்லூர் இந்து விடுதியில் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

நாவலர் சபை, யாழ். மாநகரசபை ஆகியவற்றால் இம் மகாநாடு ஒழுங்கு செய்யப்பட்டது.

நாவலர் சிலை இடமாற்றத்துக்கு தனிப்பட்ட காரணங்கள் எதுவுமில்லை. நாவலர் பெருமானின் கலாச்சார மண்டபத்தை இந்து கலாசார அமைச்சு யாழ். மாநகரசபையிடம் ஒப்படைத்து விட்டது. நல்லூர் நாவலர் மணிமண்டபக்காணி இறுதியாக கல்வி அமைச்சிடமிருந்து நாவலர் மணிமண்டபம் கட்டுவதற்காக 99 வருட குத்தகை அடிப்படையில் பெறப்பட்டது. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பிறந்து வளர்ந்த காணிப்பகுதி மிக அண்மைக்காலம் வரை உறுதிப்படுத்தப்படவில்லை. இதனால் நல்லூரில் மணிமண்டபம் அமையப் பெற்றது. இன்று நாவலர் காணியுள் அவர் நினைவாக கிணறு, வீட்டுச்சுவர் என்பன உள்ள இடத்தில் அவரின் கலாச்சார நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

நாவலர் கலாச்சார மண்டபத்தில் இந்து நூலகத்தை யாழ். மாநகரசபை நடாத்தும். இதேசமயம் நாவலருக்கு தனியான நூல்நிலையம் இயங்கும்.

இம்மாநாட்டில் நாவலர் சபை சார்பில் செயலாளர்கள் திருவாளர்கள்: கா. விசுவலிங்கம், நா. சோமகாந்தன், துணைச் செயலாளர் கா. மாணிக்கவாசகர், பொருளாளர் திரு. மு சிவராசா உதவிப் பொருளாளர் எஸ். இ. சுப்பிரமணியம் ஆகியோரும், யாழ். மாநகரசபை ஆணையாளரும், நாவலர் சபை உபதலைவருமான சி. வி. கே. சிவஞானமும் கலந்து கொண்டனர்.

## பளையில் தே. எண்ணெய் உற்பத்தி

(பச்சிலைப்பள்ளி)

பளைப் பகுதியில் சிறுகைத்தொழில் முயற்சியாக தேங்காய் எண்ணெய் உற்பத்தி ஆலைகள் தற்போது செய்யப் பட்டுவருகின்றன.

இப்பகுதியில் தேங்காயின் விலை வீழ்ச்சியடைந்ததை யடுத்து இங்குள்ள தென்னந் தோட்ட உரிமையாளர்கள் தேங்காய் எண்ணெய் உற்பத்தியில் அதிக அக்கறை கொண்டுள்ளனர்.

தற்போது பளைப் பகுதியில் தேங்காய்ஒன்றின் விலை 50 சதமாக வீழ்ச்சியடைந்துள்ளது தேங்காய் எண்ணெய் போத்தல் ஒன்று 8ரூபாமுதல் 9ரூபா வரை விற்பனையாகின்றது





மில்க்வைற் சலவைப் பவுடர்

துரித சலவைக்கும், துணிகளின் அழுக்கை ஆழ ஊடுருவி துப்பரவு செய்வதற்கும் பாவியுங்கள்.

மில்க்வைற் சலவைப் பவுடர்

56 கிராம் பைக்கற் பழைய விலை ரூ. 2/50 சதம்

" " புதிய விலை 2/- ரூபா

பாவித்த 3 பைக்கற்றுகளை அனுப்பி அழகிய யோகாசன ஸ்ரிக்கர் ஒன்றைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற் - யாழ்ப்பாணம்.


## மீனவர் தொழில் பாதிப்பு

(பச்சிலைப்பள்ளி)

பருத்தித்துறை கிழக்குப் பகுதியில் வாழ்கின்ற மீனவர்கள் தமது உயிருக்கும் உடைமைக்கும் உத்தரவாதமற்ற நிலையிலேயே தமது தொழிலினை செய்ய வேண்டியுள்ளதாக முறையீடு செய்கிறார்கள்.

இப் பகுதி மீனவர்கள் கடலில் தமது தொழிலினை மேற்கொள்ளும் போது தொடர்ச்சியாக தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டு வருவதாகவும், வலைகள் மோட்டர் இயந்திரங்கள் படகுகள் என்பனவற்றுக்குச் சேதம் இழைக்கபடுவதாகவும் புகார் தெரிவிக்கின்றனர்.

இதனால் அப் பகுதியில் உள்ள மீனவர்களின் தொழில் பாதிப்படைந்துள்ளது.

## சமயத் தொண்டும் வைத்தியத் தொண்டும் புரிந்தவர்

சுமார் அரை நூற்றாண்டு காலமாக விவாக பிறப்பு இறப்புப் பதிவு காரராக (வடமராட்சி கிழக்கு) நாகர் கோயில் குடத்தனைப் பகுதிகளிற் கடமையாற்றி ஓய்வு பெற்றவரும் கந்தப்புராணம் திருவாதவூரடிகள் புராணம் உட்படப் பல புராணங்களுக்கு வாழ்நாள் பூராகப்பல கோவில்களிற் பயன் சொல்லித் தெய்வத்தொண்டும் பரம்பரை வைத்தியத்தொண்டும் புரிந்தவருமான நாகர் கோயிலைச் சேர்ந்த திரு. சி. சிதம்பரப்பிள்ளை ஒரு மாத காலத்திற்கு முன்பு எண்பதாவது வயதிலே சிவபதமடைந்தார்.

சிறு பராயத்திலிருந்தே புராணங்களுக்கு பயன் சொல்வதையே தனது இலட்சியமாகக் கொண்டு வைத்தியமும் படித்து மற்றைய பயன் சொல்வோர் மத்தியிலும் இவரிடம் பயன் சொல்லக்கற்றோர் மற்றைய பக்தர்கள் மத்தியிலும் கலைக்களஞ்சியம், பேராசான் என்று போற்றப் பட்டார்.

கண்டாவளையிலுள்ள கோவிலொன்றில் தொடர்ந்து 25 நாட்களாகக் கந்தபுராணத்திற்குப் பயன்சொல்லி முடித்துப் புத்தகமும் கட்டிவைத்துத் தனது ஊருக்குத் திரும்பிக் கொண்டிருந்தபொழுது 'லொறி' ஒன்று இவரின் காலிலே மோதியதால் தொடர்ந்து 25 நாட்கள் சுகவீனமாய் இருந்து காலஞ் சென்றார்.

ஊழிற் பெருவலியாவுள? மற்றொன்று
சூழினுந் தான்முந்துறும்.

வடமாராட்சி கிழக்கில் உள்ள மற்றயோர் இவர்விட்டுச் சென்ற தெய்வப்பணியைத் தொடர்ந்து செய்ய வேண்டுமென்பதே இவரின் ஆசையாய் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. இவரின் ஆசையைப்பல பூர்த்திசெய்து தெய்வ ஒளிபெற இறைவன் அருள் புரிவாராக இவரின் ஆத்மா சாந்தியடைவதாக

த. செல்லத்துரை

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை ஸ்ரீவரத விக்கின விநாயகர் ஆலய மகோற்சவம் எதிர்வரும் 21-ம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத்தினங்கள் நடைபெறும். நவாலி சிவஸ்ரீ சாமி விஸ்வநாதக்குருக்கள் உற்சவத்திற்கு பிரதம குருவாக இருப்பார். (ச)

## வினை தீர்க்கும் ஈவினை கற்பக விநாயகர்

இலங்கையின் மணிமுடி எனப் போற்றப்படும் யாழ்ப்பாணத்தில் இருந்து ஏறக்குறைய ஏழரை மைல் தொலைவில் சுவினையின் மத்தியில் விக்கினங்களைத் தீர்ப்பதற்கு வீற்றிருக்கும் விநாயகப் பெருமானது ஆலயம் உள்ளது. இராமபிரானது அம்பால் உருவாக்கப்பட்ட நிலாவரை என்னும் வற்றாத கிணற்றிலிருந்து ஒரு மைல் மேற்கே அமைந்திருக்கிறது. எட்டாவதுமுறையாகக் கொடியேறவிருக்கும் இவ்வாலயத்திற்கு முதன் முதலில் 1978 இல் மகோற்சவம் நிகழ்ந்தது.


சுமார் 300 வருடங்களுக்கு முன் அவ்விடம் குளமாக இருந்தது. கோயின் மெற்குப்பக்கத்தில் ஏறக்குறைய 100 யார் தொலைவில் உள்ள அக்குளத்தின் கட்டுக்கள் நன்றாக உள்ளன. ஆயினும் குளம் நிரவிய போது முதலில் பெரியதம்பிரான் ஆலயமே அங்கிருந்தது. அதன்பின் 1878 இல் அங்கு ஓர் பிள்ளையார் ஆலயம் எழுப்பப்பட்டது.

இங்கு மகோற்சவத்தின் 6ம் நாளாக நடைபெறும் வசந்த உற்சவம் சிறப்புவாய்ந்த தொன்றாகும் வடக்கு வீதியில் அமைக்கப்பட்டிருக்கும் தீர்த்தத் தொட்டியில் நடைபெறும் இவ்வுற்சவம் ரதிதேவி மன்மதன் ஆகியோருடைய கதையை நினைவு கூருகின்றது இக்குளைகளால் வேயப்படும் தீர்த்தத்தொட்டி வசந்தகால சோலையைப் போல் தோற்றமளிக்கும் தீர்த்தத்தொட்டியின் நடுவில் நீர்மேல் விநாயகப் பெருமானை எழுந்தருளச் செய்து நிகவும் இவ்விழாவைக் காணக்கண் ஆயிரம் போதுமா என்ற அளவிற்குச் சிறப்பாக நடைபெறுகிறது. இதன் இறுதியில் வழங்கப்படும் 'மாம்பூ' என்னும் பிரசாதத்தை உண்ணும்போது அடியார்கள்என்னை பவண்டுகிறார்களோ அவர்கள் விரும்பியதைக் கொடுக்கிறார் விநாயகப் பெருமான்.

10-ம் நாள் நடைபெறும் தேர்த்திருவிழாவிற்கு முதல் நாள் இரவு ஒவ்வொரு ஆண்டும் மழைபெய்வித்து அன்றையதினம் அங்குள்ள பயிர்களுக்குத் தானே நீர்ப்பாய்ச்சி தேர்த்திருவிழா அன்று சிவசாயிகளை கோவிலுக்கு அழைக்கிறார் விநாயகப் பெருமான் நல்லைக் கந்தன் ஆலயத்தில் இருப்பதுபோல் மலைபோல் குவிந்திருக்கும் தேங்காயை அடிப்பது ஈவினைவாழ் இளைஞர்களுக்கு மகிழ்ச்சியான ஓர் செயலாகும்.

—க. கார்த்திகேயன்

## நெஞ்சில் நிலைத்தவர்



உலகிலே பிறந்தவர் யாவரும் இறப்பது இயற்கையின் நியதி; ஆனாலும் பிறந்துஇறந்தோரில் சிலர் என்றும் மக்களால் நினைவு கூரப்படுகின்றனர். அவர்களின் நற்பண்பும் சிறந்த சேவையுமே இதற்குக் காரணமாகின்றது இவ்வரிசையிலே புலோலி கிழக்கைச்சேர்ந்த நண்பன் சேதுநாயகம் கணேசராஜாவும் ஒருவராவார்.

கணேசராஜா இவ்வுலகை விட்டுப் பிரிந்து ஒரு மாதத்துக்கு மேலாகின்றது. கிராம சேவை அலுவலர் திரு. சேதுநாயகம், ஆசிரியை திருமதி சேதுநாயகம் ஆகியோருக்கு மூத்த புதல்வராகப் பிறந்த கணேசராஜா தம்பளை சைவப்பிரகாச மகாவித்தியாலயம், உடுத்துறை மகாவித்தியாலயம், புலோலி வேலாயுதம் ஆண்கள் மகாவித்தியாலயம் ஆகியவற்றில் கல்வி கற்றார். புலோலி வேலாயுதம் ஆண்கள் மகாவித்தியாலய மாணவத் தலைவனாகவும், சாரணர் இலத் தலைவராகவும் சிறப்பாகத் திகழ்ந்தார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பௌதிக விஞ்ஞானத்துறைக்குத் தெரிவு செய்யப்பட்ட இவர் சிறப்பாகச் செயற்பட்டு 3வது வருடம் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் வேளையிலே சகமாணவர்களுடன் சுற்றுலா சென்ற போது திஸமகாராமைக்கடலுக்குப் பலியாகி இவ்வுலகத்தை விட்டுப்பிரிந்து விட்டார்.

பல்கலைக் கழகத்திலிருந்து வெளியேறி எமக்குப் பல பணிகள் ஆற்றுவாரென எதிர்பார்த்திருக்கும்போது அந்தக் கடல் அன்னாரின் உயிரைப் பறித்ததே என எண்ணும் போது நெஞ்சம் நெகிழ்ந்து கலங்குகின்றது அன்னாரின் ஆத்மா சாந்தியடைப் பிரார்த்திப்போமாக.

ஏ. என் எஸ்
திருச்செல்வம்,

## ரூபவாஹினி

மாலை

5-00 செய்திகள்
5-05 'கார்ட்டூன்' நிகழ்ச்சி
6-00 'சுயானு' இசை நிகழ்ச்சி
6-15 உலகச் செய்திக் கோவை (தமிழ்)
6-30 செய்திகள் (தமிழ்)
6-55 இசை நிகழ்ச்சி
7-25 'சிப்ஸ்'
8-00 செய்திகள் (சிங்களம்)
8-40 விளையாட்டுப் பயிற்சி
9-00 செய்திகள் (ஆங்கிலம்)
9-20 'த சலிவன்ஸ்' (ஆங்கிலம்)
11-10 கொத்மலைத் திட்ட நிகழ்ச்சி (தமிழ்)
11-25 ஒலிபரப்பு முடிவு

# ரயில் பிரயாணிகள் தொகை குறைவு

(சுன்னாகம்)

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குச் செல்லும் ரயில்களில் பிரயாணிகளின் தொகை மிகவும் குறைவாகக் காணப்படுகிறது.

வவுனியாவில் ஏற்பட்ட சம்பவத்தினால் யாழ்ப்பாணத்திலிருந்து பிரயாணிகள்கொழும்புக்குச் செல்வது மிகக் குறைவாகவே காணப்பட்டது பெண் பிரயாணிகள் மிகச் சிலரே காணப்பட்டனர் எனினும் ரயில் சேவை பிரச்சினையின்றி வழமைபோல் நடைபெறுகிறது.

நியூ சாந்தி மினி
10-30, 2-30, 4-30, 6-30
Pending Grievences
(JUNGLE WOMEN)
—இன்று மட்டும்—

ஸ்ரான்லி மினி
5"X5" திரைவானில்
10-30, 12-30, 2-30
4-30, 6-30
LAST ORGY
ஹிற்லர் ஆட்சியில் தீவிர வாத பெண்களுக்கு செய்த கொடுமைகளும் அவர்கள் படும் துன்பங்களையும் சித்தரிக்கும் படம்.
Adults only

மே(f)பெயர் மினி சினிமா
(கன்னாதிட்டி காளிகோவில் அருகில்)
10-30, 4-45, 7-00
"Basket Case"
தன் உடலில் ஒட்டிப் பிறந்த ஒரு அரை உருவம் கொண்ட பயங்கர ரகுலாவின் திகில் நிறைந்த கதை.

உஷா மினி
10-30, 2-30, 4-45, 6-45
CODE NAME WILD GEESE
மிக நவீன ஆயுதங்களுடன் 6 கொமாண்டோக்கள் கொண்ட கொரில்லா கோஷ்டி இராணுவ முகாம் மீது தாக்குதல்

குமரன்
மினி சினிமா
10-30, 2-30, 4-30, 6-30
Gods Gun
(War Film)
பயங்கர சண்டைகள், குதிரை ஓட்டங்கள் நிறைந்த படம்

"லதா" மினி
(கோண்டாவில்)
10-30, 3-30, 6-45
விஜய்காந், நளினி, பேபி ஷாலினி
அமுத கானம்

வெலிங்டன்
10-30, 2-15, 4-30, 6-45,
திகதி: 14 - 15
THEATRE OF DEATH
16 முதல்
DRAGON DIES HARD
(புரூஸ்லியின் படம்)
முதல் முறையாக யாழ்ப்பாணத்தில் காட்டப்படுகிறது.

விகோ சினிமா
10-30, 2-30, 6-30
2-வது மாதமாக ஓடுகிறது!
தியாகராஜன், சிவச்சந்திரன், பூர்ணிமா ஜெயராம், இலக்கமிதா, ஜெய்சங்கர் நடித்த
ஈாது மகேந்திரரவின்
நீங்கள் கேட்டவை
சுண்ட்மன் கலர்

## பரிபாலனசபை

(யாழ்ப்பாணம்)
கிளிநொச்சியிலுள்ள பாரதிபுரம், மலையாளபுரம் கிராமங்களின் மத்தியில் அமைந்துள்ள ஸ்ரீபாலவிநாயகர் ஆலயத்தில் ஆலயபரிபாலனசபை அமைக்கப்பட்டுள்ளது.

இச்சபையின் பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

காப்பாளர்கள்: டாக்டர் சண்முகசுந்தரம், திரு. கே. விஸ்வலிங்கம், திரு. கனகராஜா.

தலைவர்: திரு. பி. ஆறுமுகம், பொதுச்செயலாளர்: திரு. இரா சுப்பிரமணியதாஸ் ஆகியோர் தெரிவாகினர். (பி)

பாலகன் V.V.
(சாந்தி முன்பாக)
Daily 5 Shows
CANNIBAL HOLOCAUST
Adutls only

நியூ சினிமாலயா
[R. G பில்டிங் மேல்மாடி]
மோகன்—நளினி மனோரமா—தவக்களை நடித்த
சரணாலயம்
புதிய வெளியீடு
5X5 திரையில்

ராஜா தியேட்டர்
யாழ்ப்பாணம்
தினசரி 10-30, 2-30 6-00
முத்துராமன் - ஜெயலலிதா தங்கவேலு
கணவன் மனைவி

மனோகரா
வெண் திரையில்
எம். ஜி. ஆர்.
வைஜந்திமாலா, நம்பியார் பானுமதி நடித்த
பாக்தாத் திருடன்
புதிய பிரதி
கடைசி சில தினங்கள் மட்டும்

லிபேர்ட்டி மினி
தினசரி 5 காட்சிகள்
INTRUSION CAMBODIA
பார்த்தால் தெரியும்: பார்த்துவிட்டால் புரியும். இன்றைய இளைஞரின் நாளைய சரித்திரம்; தவறவிட்டு கவலைப்படாதீர்கள்.
சிறுவர்களும் பார்க்கலாம்

S.T.L. மினி சினிமா
திருநெல்வேலி
10-30, 2-15, 5-15
சிவாஜி, பானுமதி நடித்த
கள்வனின் காதலி
22, 23 திகதிகளில்
கமல், அம்பிகா நடித்த
உயர்ந்த உள்ளம்

சரவணபவன் மினி சினிமா
(பெருமாள் கோவிலுக்கும் - வெலிங்டன் சந்திக்கும் இடையில்)
4 x 4 திரையில்
10-30, 2-30, மட்டும்
Private-Lessons
(கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்)
4-30p.m and 7-15P.m only
"Kill Them all and Come Back alone"

## ஆபாச பிலிம் தீக்கிரை

(யாழ்ப்பாணம்)
யாழ். நகரிலுள்ள மினி சினிமாதியேட்டர் ஒன்றில் நேற்றிரவு ஓடிக்கொண்டிருந்த 'புளூ பிலிம்' இளைஞர்கோஷ்டியினால் பறிமுதல் செய்யப்பட்டு, ரசிகர்கள் முன்னிலையிலேயே வைத்து தீமூட்டி எரிக்கப்பட்டது.

அத்தியேட்டரிலுள்ள டெக்கும் அவ்விளைஞர் கோஷ்டியினால் எடுத்துச்செல்லப்பட்டுள்ளது.

இதற்கு முன்னரும் குறிப்பிட்ட இத்தியேட்டரில் 'புளூபிலிம்' இளைஞர் கோஷ்டியினால் எரிக்கப்பட்டதுடன் உரிமையாளரும் எச்சரிக்கை செய்யப்பட்டாராம். (மா)

## இன்றைய பலன்

மாதம்: ஆவணி
திகதி: 4 (1985-8-20)
கிழமை: செவ்வாய்
திதி: சதுர்த்தி முற்பகல் வரை
நக்ஷத்திரம்: அத்தம் பிற்பகல் வரை

மேடம்: கூர்மையான ஆயுதங்களுடன் பழகுபவர்கள் இன்று அவதானம் வேண்டும். மேலதிகாரிகளுடன் கருத்து மோதலும் தோன்றக்கூடும்; பொறுமை நன்று.

இடபம்: தக்கசமயத்தில் தந்தையின் ஆதரவு கிடைக்கும். இன்று தனிவழிப் பயணத்தைத் தவிர்க்கவும். பெரியோர் உதவியும் உண்டு.

மிதுனம்; கடமையில் புதிய ஆர்வம் தோன்றும் வியாபாரிகளுக்கு ஆதாயம் மந்தமாக இருக்கும். திடீர் வரவுக்கும் இடமுண்டு.

கடகம்; உடல் நிலையிலும் திருப்தி தென்படும். உறவினர் ஒருவர் உதவிக்கு வருவர். புதிய நண்பர் ஒருவரின் உறவுக்கு இடமுண்டு.

சிங்கம்: அன்னிய நபர் ஒருவரால் ஏமாற்றமடைய நேரும். இன்று கொடுக்கல் வாங்கல்களை பின்போடவும். சிந்தித்து செயல்படவும்.

கன்னி: குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். குறிக்கோளிலும் தளர்ச்சி உருவாகும். தேக நிலையும் தேறும். தெய்வ சிந்தனை நன்மை தரும்.

துலாம்: எதிர்பார்க்கும் விடயம் திருப்தியைத்தரலாம். உறவினராலும் உதவி கிடைக்கும். நண்பர் ஒருவரை மீண்டும் சந்திக்கநேரும்.

விருச்சிகம்: முயற்சிக்கும் விடயமொன்று தாமதமாகும். குடும்பத்தில் சிறிய பூசல் தலை தூக்கும். அமைதியுடன் இருக்கவும்.

தனுசு: வாகன விருத்தியுடன் இல்லத்தில் திருப்தி காணும்; முன்னேற வழியும் தோன்றும்.

மகரம்: பிள்ளைப்பாசம்உள்ளத்தில் தலைதூக்கும். சமயோசித நடவடிக்கையின் மூலம் எதையும் வெற்றிகாண முடியும்.

கும்பம்: கருடப்பார்வை உங்களை வட்டமிடும். முன்னேற்றத்தை தடுப்பதற்கு விஷமிகள் திட்டம் போடுவார்கள். விழிப்புடன் இருக்கவும்.

மீனம்: வெற்றி உமதருகில் விரைந்துவரும் எதிர்பார்த்தவர்களே ஆதரவு தருவதற்கு முன்வருவார்கள். களஸ்திர வழியாலும் நன்மை சேரும்.

திருமலை
— வே. ரவீந்திரன் —



யாழ்ப்பாணம் சைவப் பரிபாலன சபையினர் அகில இலங்கைரீதியில் நடாத்தியசைவசமயப் பாடபரீட்சையில் 9-ம் வகுப்பு பிரிவில் முதலாமிடத்திற்கான தங்கப்பதக்கப் பரிசினைப் பெற்றுக்கொண்ட யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவி செல்வி மா. சிவராணிக்கு, யாழ். கல்வித் திணைக்கள பிரதம கல்வி அதிகாரி திரு. இ. சுந்தரலிங்கம் தங்கப்பதக்கம் அணிவதை படத்தில் காணலாம். சபையின் பரீட்சைச் செயலாளர் சைவ புலவர் வ. கந்தசாமியும் மத்தியில் காணப்படுகின்றார்.
(படம்: பண். திருபர்)

நேற்று முன்தினம்

# 'யாழ்தேவி'யைத் தாக்க காடையர் கூட்டம் முயற்சி!

(கொழும்பு)
நேற்றுமுன்தினம் மதவாச்சி வருகே யாழ் தேவி புகையிரதத்தை தாக்க எடுத்த முயற்சியொன்று பாதுகாப்புப்படைகளின் தலையீட்டையடுத்து முறியடிக்கப்பட்டது.

வவனியாவிலிருந்து 'யாழ் தேவி' ரயில் கொழும்பு செல்லத் தயாரானது. வவனியா அரச அதிபர் திரு. கே. வி. லோகேஸ்வரனும் அதிலிருந்தார்.

ரயில் புறப்பட்ட சமயம் காடையர் கோஷ்டிகள் சிலமதவாச்சியருகே 'யாழ் தேவி' ரயிலைத் தாக்குவதற்கு ஆயத்தமாக நிற்கின்றன என்ற தகவல் கிடைத்தது.

இதனைத் தொடர்ந்து ரயில் சாரதி ரயிலைச் செலுத்துவதற்கு மறுத்தார். தாம் மீண்டும் யாழ்ப்பாணம் செல்லப் போவதாகவே அவர் தெரிவித்தார். அப்போது அரச அதிபர் திரு. லோகேஸ்வரன் ரயில்வே பகுதி, மற்றும் இராணுவ, பொலிஸ் வட்டாரங்களுடன் தொடர்பு கொண்டு நிலைமையை விளக்கினார். அனுராதபுரம் இராணுவத்துக்கும் இது குறித்து தகவல் அனுப்பப்பட்டது. தொடர்ந்து இராணுவ அணியொன்று மதவாச்சிக்கு விரைந்து அங்கு உஷார் நிலையில் நின்றது.

இப்பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டதை யடுத்து வவனியாவிலிருந்து 'யாழ் தேவி' பயணத்தைத் தொடர்ந்தது.

மதவாச்சிப் பகுதியினூடாக யாழ்தேவி சென்றபோது ரயில் பாதையின் இரு புறத்திலும் பொல்லுகள், தடிகள், மற்றும் ஆயுதங்களுடன் பலர் அதனைப் பார்த்தபடி எதுவும் செய்யாது நின்றனராம்.

மதவாச்சியிலும் ரயில்நிறுத்தப்படாது பயணம் தொடர்ந்தது. மருதானை ரயில் நிலையத்தை இருமணிநேரதாமதத்தின் பின்னரே யாழ்தேவி சென்றடைந்தது. (இ)

## சனசமூகநிலைய ஆண்டுவிழா

(கல்வியங்காடு)
திருநெல்வேலி பாரதிபுரம் பாரதி சனசமூகநிலையத்தின் 3வது ஆண்டுவிழாவையொட்டி காந்தி, இந்திரா, நேரு ஆகிய இல்லங்களுக்கிடையே நடைபெற்ற விளையாட்டுப்போட்டியில் பிரதமவிருந்தினர்களாக முத்துத்தம்பி வித்தியாலய அதிபர் திரு. எம். முத்துலிங்கம், திருநெல்வேலி ப. நோ. கூ. ச தலைவர் திரு. எஸ். பசுபதி ஆகியோர்கலந்து கொண்டு பரிசில்களையும் வழங்கினர்.

நிலையத்தின் தலைவர் திரு. செ. தர்மராசா தலைமையில் விழாக்கூட்டம் நடந்தது.

"பெரியகல்லூரிகளில் நடப்பதுபோன்று விளையாட்டுக்களை நடத்தி முடித்திருக்கிறீர்கள். இதற்காக விளையாட்டுப் பொறுப்பாளர் திரு. எஸ். விபரமராசாவையும், பாரதி நிலைய நிர்வாகிகளையும் பாராட்டுகிறேன்" என்று முத்துத்தம்பி வித்தியாலய அதிபர் தமதுரையில் தெரிவித்தார்.

## முத்துமாரி அம்மன் திருவிழா

(வேலணை)
வேலணை நெடுங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய திருவிழா 4-ம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. 29-ம் திகதி வியாழக்கிழமை தேர்த் திருவிழாவும், 30-ம் திகதி தீர்த்தத் திருவிழாவும், 31-ம் திகதி பூங்காவனத் திருவிழாவும் நடைபெறும்.

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

### அரச வங்கிகளின்
# தொழிற்சங்க தலைவர்களுக்கு வேலை நீக்க நோட்டீஸ்!

(கொழும்பு)
அரசாங்கவங்கிகளைச் சேர்ந்த தொழிற்சங்கத் தலைவர்களுக்கு வேலைநீக்க நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வங்கியிலும் 6 தொழிற் சங்க தலைவர்களுக்கு வேலை நீக்கநோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளது.

எற்கனவே இருவங்கி ஊழியர்கள் நிமாண்டில் வைக்கப் பட்டுள்ளனர். (இ - க)

## மூவர் கொலை

(பாவற்குளம்)
வவனியா பாவற்குளம் என்னுமிடத்தில் 3 சிங்கள இனத்தவர் கொல்லப்பட்டுள்ளனர். இதில் ஒரு வயோதிபரும் அடங்குவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

நேற்று முன்தினம் இரவு இச்சம்பவம் நடைபெற்றது. (மா)

## ஜீப் எஞ்சின் கடத்தல்

(யாழ்ப்பாணம்)
யாழ் அரசாங்க செயலகத்தில் நேற்று முன்தினமிரவு ஜீப்எஞ்சின் ஒன்று இனந்தெரியாதவர்களினால் எடுத்துச்செல்லப்பட்டுள்ளது.

இந்த ஜீப்வண்டி முன்பு நடந்தசம்பவம் ஒன்றின்போது எரிக்கப்பட்டு எஞ்ஜின் மட்டும் சேதப்படாமல் இருந்தது.

அங்கு வந்த 4 இனந் தெரியாதவர்கள் காவலாளியை எச்சரித்துவிட்டு இந்த ஜீப் என்ஜினை எடுத்துச் சென்றதாக கூறப்படுகிறது! (க)

## ராஜீவுக்கு இன்று 41 வயது



இந்தியப்பிரதமர் திரு: ராஜீவ் காந்தி தனது 41-வது பிறந்த நாளை இன்று எளிமையான முறையில் கொண்டாடுகிறார் இவர் 1944-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20-ந் திகதி பிறந்தார். (கெ)

## விடுதலை செய்யக்கோரி சுவரொட்டி!

(யாழ்ப்பாணம்)
தங்காலைச் சிறையில் வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களை உடன் விடுதலை செய்என்ற வாசகங்களையுடைய சுவரொட்டிகள் யாழ்ப்பாண மெங்கும் காணப்படுகிறது.

சிறையில் தமிழ்க் கைதிகள் படுகொலை செய்யப்படுவதை எதிர்த்து சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் தங்காலைச் சிறையில் நடக்கிறது என்றும் பயங்கரவாதத் தடைச்சட்ட காலஎல்லை 18 மாதங்களாக இருந்த போதிலும் அதனையும்மீறி தமிழ் இளைஞர்களை வைத்திருப்பதை விடுத்து உடன் விடுதலை செய்யக்கோரி உண்ணாவிரதப் போராட்டம் நடப்பதாகவும் ."தீப்பொறி" யினர் இச்சுவரொட்டிகளை ஒட்டியுள்ளனர்.

## இன்று

(யாழ்ப்பாணம்)
யாழ் கொட்டடி பண்ணை மீனாட்சி அம்மன் கோவிலில் இன்று செவ்வாய்க்கிழமை பகல் சங்காபிஷேகமும், மாலை 4 மணிக்கு விசேஷ பூசையும் அம்பாள் வெளிவீதி வலம்வருதலும் நடைபெறும்.

★ ★ ★

(வண்ணார்பண்ணை)
தொல்புரம் கொட்டடிப்பதி ஸ்ரீ ஆதிமுத்துமாரியம்மன் வருடாந்த சங்காபிஷேகம் இன்று செவ்வாய்க்கிழமை வழமை போல் நடைபெறவுள்ளது.

## 8 பேர் பலி 9 பேர் காயம்

(திருகோணமலை)
திருகோணமலையிலுள்ள நாவல் வத்தை என்றகிராமத்தில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் 8 சிங்கள இனத்தவர் கொல்லப்பட்டுள்ளதாகவும் 9 பேர் படுகாயமடைந்த மொறவக்க ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

நேற்று முன்தினம் இரவு இத்தாக்குதல் சம்பவம் இடம் பெற்றதாகக் கூறப்படுகிறது. (மா)

## கன்னதிட்டி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
வுள்ளன.

கன்னதிட்டி மக்கள் வங்கிக் கிளையில் நகைகள் அடகுவைத்தவர்களில் சுமார் 170 பேர் தங்கள் நகைகளை மீட்கப் பணம் செலுத்தியிருந்தனர் இவர்களில் 45 பேர் நேற்று கன்னதிட்டிக் கிளைக்குச் சென்று கியூவில் நின்று நகைகளை பெறுவதற்கான 'நம்பர்' துண்டுகளைப் பெற்றுக்கொண்டனர்.

மக்கள் வங்கிக் கிளைகளில் நகைகள் அடகு வைத்தோர் சங்கம் கடந்த 9ம் திகதி தொடக்கம் யாழ் மாவட்டத்திலுள்ள வங்கிக்கிளைகளின் முன்னால் தீவிர மறியல் போராட்டம் நடத்தியதன் பிரதிபலனாக. முதலாவதாகக் கன்னதிட்டிக்கிளையில் நகைகள் அடகுவைத்துப் பணம் செலுத்தியவர்களுக்கு வழங்கப்படுகிறது.

# வவனியா இழப்புகள் பற்றி தகவல் சேகரிக்கப்படுகிறது!

(யாழ்ப்பாணம்)
வவனியாவில் நடந்த துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் பலியானவர்கள், காயமடைந்தவர்கள், காணாமல்போனவர்கள் பற்றிய விபரங்களை பாதிக்கப்பட்ட ஊழியர் இணைப்பு குழு திரட்டி வருகிறது.

வவனியாவில் பலியானவர்கள், காயமடைந்தவர்கள். காணாமல் போனவர்கள் பற்றிய விபரங்களை யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி. 95/1 இலக்கத்திலுள்ள பாதிக்கப்பட்டோர் இணைப்பு குழு காரியாலயத்தில் பதிவு செய்யுமாறுகுழுவின்செயலாளர் திரு. ஐ. தி. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இவர்களுக்கு நிவாரணம் பெற்றுத்தருவதற்கு இவ்விபரங்கள் அவசியம் தேவைப்படுவதாகவும் அவர் கூறினர்.

வவனியாவிலிருந்து வந்து தற்போது யாழ்ப்பாணத்திலும். வேறு இடங்களிலும் இருப்பவர்கள் உடனடியாக இவ்விபரங்களை தந்துதவுமாறு அவர் கேட்டுள்ளார். (க)

## பவுஸர் கடத்தல்

(முல்லைத்தீவு)
கிளிநொச்சியிலிருந்து முல்லைத்தீவு ப. நோ. கூ. சங்கத்தின் எரிபொருள் நிலையத்துக்கு பெற்றோல் கொண்டு வந்த பவுஸர் ஒன்று இனந் தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்புக்கும் விசுவமடுவுக்குமிடையில் பவுஸர் சென்றுகொண்டிருந்த போது சாரதியையும் கிளீனரையும் துப்பாக்கி முனையில் இறக்கிவிட்டு பவுஸரைக் கடத்தியதாக புகார் செய்யப்பட்டுள்ளது.

இக்கடத்தல் சம்பவம் தொடர்பாக மேற்படி நிலையத்தின் கிளை முகாமையாளர் இராணுவ விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார். (மா)

### சமையல்காரர்
## பண்டா கடத்தல்

(முல்லைத்தீவு)
முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் சமையல் வேலைசெய்யும் பண்டா [36 வயது] என்பவர் இனந்தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் கடந்த வியாழக்கிழமை முல்லைத்தீவு நகரில் வைத்துக் கடத்தப்பட்டாராம்.

இவரின் மனைவி புஷ்பராணி என்பவரும், முன்னை கிராம சேவையாளருமான செல்வநாயகம் என்பவரும் கடந்த ஒருமாதத்துக்கு முன்னர் கடத்திச் செல்லப்பட்டது தெரிந்ததே (மா)

## அறிக்கை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது

இலங்கையில் சுமார் 500 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டது பற்றி ராஜ்ய சபா உறுப்பினர்கள் கொண்ட கவலையை தாம் பகிர்ந்து கொள்வதாக சபை முன்னவரான நிதி அமைச்சர் திரு வி. பி. சிங் அறிவித்துள்ளார்.

இப்பிரச்னை சம்பந்தமாக சாத்தியமான எல்லா நடவடிக்கைகளையும் இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி எடுத்து வருவதாகவும் அவர் சபையில உறுதியளித்தார்.

அ அ தி. மு க உறுப்பினர் திரு மோகனரங்கமும், இந்திரா காங்கிரஸ் உறுப்பினர் திரு. தங்கபாலுவும் விசேடமாக இந்தப் பிரச்னையை எழுப்பியதையடுத்து திரு. வி பி சிங் இவ்வாறு தெரிவித்தார். (து)

இம்மாதம் 26ம் திகதி தொடக்கம் மற்றைய மக்கள் வங்கிக்கிளைகளிலும் நகைகள் அடகுவைத்தோருக்கு வங்கி நிர்வாகம் நகைகளை வழங்கத் தவறுமேயானால் தொடர்ந்து தீவிரமறியல் போராட்டம் நடத்தப்படும் என்று மேற் குறிப்பிட்ட சங்கத்தின் பிரமுகர் ஒருவர் வலியுறுத்திச் சொன்னார். (மா)

## 5 ஆயிரம் லீட்டர் பெற்றோல், டீசல் கொள்ளை

(யாழ்ப்பாணம்)
எரிபொருள் கூட்டுத்தாபனத்தின் யாழ். கிளையில் 5 ஆயிரம் லீட்டர் பெற்றோலும், 5 ஆயிரம் லீட்டர் டீசலும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் இரவு இந்த எரிபொருட்கள்கொள்ளை அடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. [மா]

# திம்புபேச்சு தொடர ஈ. தே. வி. மு. 3 நிபந்தனை

(சென்னை)
திம்பு சமாதானப் பேச்சுக்களில் கலந்துகொண்ட ஈழத் தேசிய விடுதலை முன்னணி இலங்கை அரசுடன் மீண்டும் பேச்சுவார்த்தைகளைத் தொடருவதற்கு மூன்று நிபந்தனைகளை விதித்துள்ளது.

அவை வருமாறு! அப்பாவித் தமிழ்மக்களைக் கொல்வதை இலங்கை இராணுவம் நிறுத்தவேண்டும்.

இலங்கை இராணுவம் போர்நிறுத்த உடன்பாட்டை முழுமையாக கடைப்பிடிக்க வேண்டும்.

சிறுபான்மைத் தமிழர்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்திசெய்யக்கூடிய புதிய யோசனைகளை இலங்கை அரசு தெரிவிக்க வேண்டும்.

இந்நிபந்தனைகள் ஏற்கப்பட்டாலேயே பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடரமுடியுமென்று நேற்று முன்தினம் இரவு சென்னையில் கூடிய ஈழத் தேசிய விடுதலை முன்னணி தீர்மானித்துள்ளது. (து)

## சாகும்வரை உண்ணாவிரதம் தொடருகிறது

[வேலணை]
வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவரை விசாரணைக்காக அழைத்துச் சென்றவர்கள் இன்னமும் விடுதலை செய்யாத காரணத்தால் அவரது உறவினர்களால் மேற்கொள்ளப்பட்ட சாகும்வரையிலான உண்ணாவிரதம் இன்றுடன் நான்கு நாட்களாக தொடர்ந்து இரவு பகலாக நடைபெற்று வருகின்றது.

உண்ணாவிரதத்தை மேற்கொண்டவர்கள் நேற்றைய தினம் சங்கத்தின் தலைமைக் காரியாலயம், கிராமிய வங்கி, புடவைக் கிளை ஆகியவற்றின் முன் இருந்தனர்.

## இன்ரசிற்றி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
கடைசியாகவுள்ள இரு பிரயாணிகள் பெட்டிகளும் மர்மமானமுறையில் விபத்துக்குள்ளாயின.

தலைமைக்காரரான ராஜரட்னம் என்பவரும், ரயில் போர்டன் இராஜையா என்பவரும், மற்றும் சில பிரயாணிகளும் இதனால் படுகாயமடைந்தனர்.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து மற்றைய பிரயாணிகள் மத்தியில் பதற்றநிலை ஏற்பட்டது.

சேதமடைந்த இருபெட்டிகளையும் ஸ்தலத்தில் கழற்றிவிட்டபின்னர் படுகாயமடைந்த பிரயாணிகளுடன் ரயில் அனுராதபுரம் விரைந்தது.

தலைமைக்காரிட்டும், போர்டனும் உடனடியாக அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர், இவர்களின் நிலைமைபற்றி ஆஸ்பத்திரியுடன் தொடர்புகொண்ட போது ஆபத்தானகட்டத்தை அவர்களிருவரும் தாண்டிவிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

மற்றும் காயமடைந்த பிரயாணிகள் அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு செல்ல மறுத்துவிட்டதால் அவர்கள் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டனர்

இரவு 7-35 க்கு அனுராதபுரம் ரயில் நிலையத்தில் புதிய கார்ட் பெட்டியொன்றை இணைத்துக் கொண்டு இந்த ரயில் புறப்பட்டது.

தொடர்ந்து மூன்று மணி நேரதாமதத்தின் பின்னர் இரவு 1 30 க்கு கொழும்பு ரயில் நிலையத்தை இந்தரயில்வண்டி சென்றடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வடபகுதி ரயில்சேவை ரத்து

கொழும்பு — காங்கேசன் துறைக்குமிடையேயான ரயில் சேவைகள் மறு அறிவித்தல் வரை ரத்துச்செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது

வடபகுதிக்கான ரயில் சேவை அனுராதபுரம் வரையும் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (பெ-மா)

## இருபாலையில் கொள்ளை

(கல்வியங்காடு)
இருபாலையில் ஒரு லட்சத்து மூவாயிரம்ரூபா பெறுமதியான மோட்டார் உதிரிப்பாகங்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண நகரில் வியாபார ஸ்தாபனத்தை நடத்தும் ஒருவரது வீட்டிலேயே இக்கொள்ளை நடந்தது

இருபாலை, கோண்டாவில் வீதியில் இவ்வியாபாரியின் வீட்டின் கராஜில் வைக்கப்பட்டிருந்த மோட்டார் உதிரிப் பாகங்களும், மற்றும் மோட்டார் சைக்கிளையும் கொள்ளையர் எடுத்துச் சென்றுள்ளனர்.

இனந்தெரியாத ஆறு இளைஞர்கள், வீட்டில் இருந்தவர்களைப் பயமுறுத்தி அறை ஒன்றினுள் அவர்களைப் பூட்டி வைத்தே இக்கொள்ளையை நடத்தினராம்.

## வவனியா வழமைக்குத் திரும்பவில்லை

(வவனியா)
வவனியா ஆஸ்பத்திரிப் பிரேத அறையில் வைக்கப்பட்டு 8 அடையாளம் காணப்படாத சடலங்களையும் நேற்று முன்தினம் இராணுவத்தினர் எடுத்துச்சென்று எரித்ததாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தது

ஆஸ்பத்திரியைச் சுற்றிவளைத்து இராணுவத்தினர் பாதுகாப்பிலீடுபட்டிருந்தனர். இதனால் அப்பகுதியில் பதற்றநிலை ஏற்பட்டது

வவனியாவில் கடந்த 16-ம் திகதி இடம்பெற்ற சம்பவத்தில் ஆயுதப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட பொதுமக்களில் 23 சடலங்கள் வவனியா ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப் பட்டதும் அதில் 15 சடலங்கள் அடையாளம் காணப்பட்டதும் தெரிந்ததே.

இச்சம்பவத்தின்போது ஒரே குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் யாவரும் கொல்லப்பட்டதும், அவற்றுள் தப்பிக் கொண்ட சிலர் பீதி காரணமாக வெகுதூரமுள்ள கிராமங்களுக்குத் தப்பிச்சென்றதும் குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 68ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. Box 49, Telegram Eelanadu, Telephone; 22389 ,24126;